விலை: 60.00
பக்கங்கள் - 24

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 26
ஒலி 115 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 30 ஞாயிற்றுக்கிழமை (13.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## எறும்பு கடித்த காயத்தால் ஏற்பட்ட கிருமித் தொற்று

### யாழில் 21 நாட்களேயான பெண் குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

எறும்பு கடித்த காயத்தை முறையாகக் கவனிக்காது விட்டமையினால் ஏற்பட்ட கிருமித்தொற்று காரணமாக பிறந்து 21 நாட்களேயான பெண் குழந்தையொன்று நேற்றுக் காலை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தைக்கு நேற்று அதிகாலை பாலூட்

23 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய முதலிடுங்கள்

### புலம்பெயர் உறவுகளுக்கும் அமைச்சர் விஜித ஹேரத் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய முதலீடு செய்ய முன்வாருங்கள் என புலம்பெயர் உறவுகளிடம் அமைச்சர் விஜித ஹேரத் அழைப்பு விடுத்துள்ளார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர்

23 ஆம் பக்கம் பார்க்க

### உள்ளகப் பொறிமுறை ஊடாக

# காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் நீதியான விசாரணை

### மன்னாரில் பிரதமர் ஹரிணி அமரசூரிய

(மன்னார்)

- இனவாதத்தை எதிர்க்கின்றோம்.
- நாட்டுக்கு நல்லிணக்கம் தேவை.
- சட்டம் அனைவருக்கும் சமமாக அமுலாகும்.
- மக்களை ஒன்றிணைக்கவே ஆட்சிக்கு வந்தோம்.



மன்னார் நானாட்டானில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

உள்ளகப்பொறிமுறையின் ஊடாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் நீதியான விசா

23 ஆம் பக்கம் பார்க்க

## சுன்னாகத்தில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியிலுள்ள வீட்டின் சமையல் கூடத்தில் இருந்து குடும்பஸ்தர் ஒருவரது சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் சபாபதிப்பிள்ளை வீதி சுன்னாகம் தெற்குப் பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக

23 ஆம் பக்கம் பார்க்க

பல்வேறு பல்சுவை அம்சங்களுடன் உங்கள் சங்குநாதம் உள்ளே... தவறாது கேட்டு வாங்குங்கள்

## சாதி, மத, இன பேதங்களைக் கடந்து நாம் ஒரு தாய்ப்பிள்ளைகள்



### யாழில் தமிழில் தெரிவித்த அமைச்சர் விஜித ஹேரத்

(யாழ்ப்பாணம்)

சாதி, மத, இன பேதங்களைக் கடந்து நாம் அனைவரும் ஒரு தாய்ப் பிள்ளைகளாக ஐக்கியப்பட வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் யாழ்ப்பாணத்தில் வைத்து

23 ஆம் பக்கம் பார்க்க

## புன்னாலைக்கட்டுவனில் மோ.சைக்கிள் விபத்து

### குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

23 ஆம் பக்கம் பார்க்க

### 14 மாவட்டங்களுக்கான

## வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும் பணி நிறைவு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு 14 நிர்வாக மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுகள் அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

ஒரு கோடியே 10 இலட்சம் வாக்குச்சீட்டுக்கள் இது வரை அச்சிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 11 மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுக்கள் அச்

23 ஆம் பக்கம் பார்க்க

## பதிலளிக்காமல் நழுவினார் அமைச்சர் விஜித ஹேரத்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் பிரதமர் ஹரிணி அமரசூரியவால் ஏற்பட்ட சர்ச்சை தொடர்பாக ஊடக வியலாளர்களால் எழுப்பப்

02 ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சி அம்பனில் டிப்பர் - மோ.சைக்கிள் விபத்து

### ஒருவர் உயிரிழப்பு



(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் இடம்பெற்ற டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

23 ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் தொடர்பில் முடிவெடுக்க சட்டமா அதிபரை இன்று சந்திக்கிறது தேர்தல்கள் ஆணைக்குழு

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் இறுதி முடிவெடுக்க தேர்தல்கள் ஆணைக் குழு இன்று காலை சட்டமா அதிபரை சந்திக்கவுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் சட்டச் சிக்கல்கள், குழப்பங்கள் ஏற்பட்டுள்ள பின்னணியில் நேற்று காலை கூடிய தேர்தல்கள் ஆணைக்குழு அது பற்றி விரிவாக ஆராய்ந்தது. தேர்தல்கள் ஆணைக்குழு கூட்டத்தில் முரண்பாடான கருத்து நிலைப்பாடுகள் வெளிப்பட்டன எனத் தெரிகிறது.

இவ்விவகாரத்தை ஒட்டி இன்று காலையில் சட்டமா அதிபரை தேர்தல்கள் ஆணைக்குழு நேரடியாகச் சந்திக்கவுள்ளது.

சட்டமா அதிபருடன் கலந்தாலோசித்த பின்னரே தேர்தல் வேட்புமனுக்கள் நிராகரித்தமை தொடர்பான வழக்குகளில் உயர்நீதிமன்றத்தினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் தீர்ப்புகளில் உள்ள முரண்பாடுகள் குறித்து என்னசெய்வது என்பது பற்றி தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானிக்கும் எனத் தெரிகிறது.சட்டச் சிக்கல்கள், வழக்குகள், நெருக்கடிகள் இல்லாத உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களை குறிப்பிட்ட மே 6 ஆம் திகதி நடத்திக் கொண்டு, சட்டச் சிக்கல் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களைப் பிறிதொரு கட்டத்தில் நடத்துவது குறித்தும் நேற்றைய கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டதாகத் தெரியவந்தது. (ம-7)

## பதிலளிக்காமல்...

பட்ட கேள்விக்குப் பதிலளிக்காமல் அமைச்சர் விஜித ஹேரத் நழுவிச் சென்றார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் யாழ்ப்பாண வர்த்தகப் பிரதிநிதிகளை சந்தித்த பின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டார்.

அங்கு ஊடகவியலாளர்களால் நேற்று முன்தினம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் மகா கும்பிஷேகத்தில் பிரதமர் கலந்து கொண்டமையால் ஏற்பட்ட பாதுகாப்புக் கெடுபிடிகள் தொடர்பிலும், ஆலய வளாகத்தில் பிரதமரின் பாதுகாப்புப் பிரிவினர் சப்பாத்துக் கால்களுடன் வலம்வந்தமை தொடர்பிலும் கேள்விகள் தொடுக்கப்பட்டது. இதற்கு அமைச்சர் விஜித ஹேரத் தனக்கு ஒன்றும் தெரியாது என்று நழுவிச் சென்றார். (ம-7)


VIVAAKAM



வலைதள மேற்பார்வையாளர் & வாடிக்கையாளர் ஆதரவு

System Moderator & Customer Support Role

முழுநேர வேலை

உலகெங்கும் உள்ள இலங்கைத் தமிழர்களின் திருமணப் பயணத்தை எளிதாக்கும் Vivaakam.com விரைவாக வளர்ந்து வரும் நிறுவனம். இந்த பயணத்தில் எங்களுடன் இணைந்து பணியாற்ற ஆர்வமுள்ளவர்கள் தேவை.

வேலைபொறுப்புகள்:
- பயனர் சுயவிவரங்களை சரிபார்த்தல்
- உள்ளடக்க கண்காணிப்பு மற்றும் விதிமுறை பேணல்
- வாடிக்கையாளர் சேவை & உதவி
- தொழில்நுட்ப சிக்கல்களை தீர்த்து வைத்தல்
- பயனர் ஈடுபாடு மற்றும் தக்கவைத்தல்
- பின்னூட்டம் சேகரித்து மேம்படுத்தல்
- உதவிக்கான வளங்களை பராமரித்தல்

தகுதிகள்:
- கல்வித்தகுதி: உயர் தரம் (G.C.E A/L)
- வாடிக்கையாளர் ஆதரவு பணியில் முந்தைய அனுபவம் இருப்பது கூடுதல் நன்மை
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் (எழுத்திலும் பேச்சிலும்) வலுவான தொடர்பாடல் திறன்கள் – பயனர்கள் மற்றும் உள்ளக குழுக்களுடன் தொழில்முறை முறையில் தொடர்பு கொள்ளும் திறன்
- அடிப்படை கணினி மற்றும் சரிசெய்தல் திறன்
- சிக்கல்களை தீர்க்கும் மனப்பாங்கு
- கவனக்குறைவில்லாமல் செயல்படும் திறன்
- பல்துறை செயல் திறன்

(C-2695)

நீங்கள் எங்கள் குழுவில் சேரத் தயாராக இருந்தால், உங்கள் சுயவிவரத்தை hello@vivaakam.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும். "System Moderator & Customer Support Role" எனக் குறிப்பிடவும்.



## ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரிகள் தேவை
## பகுதி நேர வேலை

6 ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை வினாத்தாள்களை எங்கள் ஆன்லைன் தளத்தில் பரிசீலிக்க தகுதியுள்ள ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரிகளைத் தேடுகிறோம்.

பாடங்கள் : கணிதம், விஞ்ஞானம், வரலாறு தமிழ்மொழி, சிங்கள மொழி, ஆங்கில மொழி, தொழில்நுட்பவியல் (ICT)
தரம் : (6 முதல் 11 ஆம் வகுப்பு வரை)

வேலை :
- பரீட்சை கேள்விகள் மற்றும் பதில்களை சீராக பரிசீலித்து சரிபார்க்க வேண்டும்.
- திருத்தங்கள் இருந்தால் குறிப்பிட்டு, பரிந்துரைக்கும் திருத்தங்களைப் பதிவுசெய்ய வேண்டும்.

தேவைகள் :
- சம்பந்தப்பட்ட துறையில் தகுதியான ஆசிரியர்கள் அல்லது பட்டதாரிகள்.
- அடிப்படை கணனிப் பயிற்சி மற்றும் கூர்ந்த கவனிப்பு.

அவசரம் : உடனடி பணியேற்பாடு - இப்போது விண்ணப்பியுங்கள்!

இந்த ஓர் அருமையான கல்வித் திட்டத்தில் பங்கு கொள்ளுங்கள்!

இப்போது விண்ணப்பியுங்கள்

உங்கள் CV இந்த மின்னஞ்சலுக்கு அனுப்பவும்:

careers@edsider.com

மேலும் தகவல்களுக்கு தொடர்புகொள்ளவும்:

சிங்களம் : + 94 71 658 9506
தமிழ் : + 9470454 6424
ஆங்கிலம் : + 94 78 685 1714

(C-2696)



## ஆண் வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு வியாபாரம் செய்யும் அனுபவம் உள்ள 18 - 30 வயதுடைய ஆண் வேலையாள் தேவை.

- தங்குமிட வசதி செய்து தரப்படும்.
- மாதம் 60,000 - 70,000 அடிப்படை சம்பளம் வழங்கப்படும்.
- நிரந்தர வேலை வழங்கப்படும்.
- வியாபாரம் தெரிந்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :

077 937 0000, 075 988 1000

(1019)


## நல்லை மங்கையர்க்கரசியின் விழிநீர் அஞ்சலி



எமது பாடசாலையின் வர்த்தக, செயல்முறை தொழில்நுட்ப பாட ஆசிரியர் திரு. இராசரெத்தினம் கிருஸ்ணானந்தன் அவர்களின் அன்பு மாமியார்

திருமதி இராமலிங்கம் நாகேஸ்வரி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது விழிநீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

(C-2694)


## காணி விற்பனைக்கு

தீவுப் பகுதியைச் (அல்லைப்பிட்டி) சேர்ந்த

1. வடலித்தோட்டம் (கவறங்வளவு) பெயருள்ள காணி நிலப்பரப்பு 11 ½ பரப்பு
2. "நரியன் வயலும்", "நரியன் வளவும்" என்ற பெயருள்ள, நெற்பரப்பு 97 பரப்பு, பரப்பு 10 உம், 1 ½ குழியும் உள்ள நெற்காணி
3. நரியன் வயல் பெயருள்ள காணி நிலப்பரப்பு 5 5/8

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்

077 301 3652
077 191 9985
011 255 5571

(3923)



## மலர்வளையம்

புத்தம் புதியவை

Small 2500/=
Large 3500/=

- ஈசன்ஸ் -

148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695/ 077 429 0613

(C-2701)


## புங்குடுதீவு இறுப்பிட்டி அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் பரிபாலனசபை

## பதவி: மேற்பார்வையாளர்

பரிபாலனசபையின் அனுசரணையுடன் ஆலயத்தில் நாளாந்த செயற்பாடுகளை நிர்வகிப்பதற்கு மேற்பார்வையாளர் ஒருவர் தேவை. இப்பதவிக்கு புங்குடுதீவு, நயினாதீவு மற்றும் வேலணைத் தீவினை வசிப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்விரும்பத்தக்கது. விண்ணப்பிப்பவர்களுக்கு அவரது நாளாந்த கடமைகள் மற்றும் ஊதியம் தொடர்பாக பரிபாலன சபையால் தெரியப்படுத்தப்படும். கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும். பின்வரும் விலாசத்துடன் 20.04.2025 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

ச.தனபாலசிங்கம்
தலைவர்
076 803 5067

தொடர்பு முகவரி
154/4, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

சு.சண்முகநாதன்
பதில் செயலாளர்
077 031 9655

(3928)


## நாகபூஷணி திருமண சேவை

புதுவருடத்தை முன்னிட்டு 50% கட்டணக் கழிவு

(13.04.2025 முதல் 16.04.2025 வரை)

நீங்கள் விரும்பும் மணமக்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்பட்டு துரிதமாகத் திருமணம் நிறைவேற்றி வைக்கப்படும்.

198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)

077 138 7596, 071 999 9306, 021 222 9306

(3937)


## வருடாந்த பொதுக்கூட்டம் - 2025

ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் 2025ம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காலம் : 27.04.2025 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : பி.ப 4.00மணி
இடம் : ஞானசம்பந்தர் கலை மன்ற மண்டபம்

புலோலி வடக்கு,
பருத்தித்துறை

(C-2676)

செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(C-127)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்களைச் செலுத்தும் போது அவதானத்துடன் செயற்படுங்கள்!

## சுகாதார அமைச்சு வலியுறுத்து

**(கொழும்பு)**

**பண்டிகைக் காலத்தில் வெளியூர் மற்றும் தூர இடங்களுக்குப் பயணிப்போர் மிகுந்த அவதானத்துடன் வாகனம் செலுத்துவது அவசியமானது என சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.**

இதன் மூலம் திடீர் விபத்துக்களைத் தவிர்க்க முடியுமென சுகாதார அமைச்சு பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

கடந்த காலத்தில் புத்தாண்டின்போது 28,000 முதல் 30,000 வரையிலானவர்கள் விபத்துக்கள் காரணமாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாக விசேட வைத்திய நிபுணர் சமித சிறிதுங்க தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்தில் ஏற்படும் விபத்துக்களினால் 75 முதல் 100 பேர் வரை உயிரிழந்ததாகப் பதிவாகிய தரவுகள் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் வாகன சாரதிகள் மற்றும் பொதுமக்கள் மிகவும் அவதானமாகச் செயற்படுமாறும் பாதுகாப்பான இடங்களில் விடுமுறையை களிக்குமாறும் வைத்தியர் அறிவுறுத்தியுள்ளார். (நி-8)

## 20 நாட்களுக்குள் 1,121 முறைப்பாடுகள்





(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு முதல் 20 நாட்களுக்குள் 1,121 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

6 வன்முறைச் சம்பவங்கள் மற்றும் தேர்தல் சட்டங்களை மீறிய 1,062 முறைப்பாடுகளும் அவற்றில் உள்ளடங்குவதாக ஆணைக்குழு குறிப்பிட்டது.

கிடைத்த முறைப்பாடுகளில் 996 முறைபாடுகள் தீர்க்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது. (நி-8)

## சஜித்தை டில்லிக்கு அழைத்த மோடி



(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவை டில்லிக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர் நரேந்திர மோடி, கொழும்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவை சந்தித்து இருதரப்புக் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தார்.

இதன் போதே டில்லி விஜயத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்டது. கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் சுமார் 30 நிமிடங்கள் வரை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில்,

இலங்கைக்கு எத்தகைய உதவியை இந்தியாவிடமிருந்து எதிர்பார்க்கின்றீர்கள் என்று பிரதமர் நரேந்திர மோடி, எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் வினவியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த சஜித் பிரேமதாச, கொவிட் பெரும் தொற்றின் போதும், அதன் பின்னரான பொருளாதார நெருக்கடியின் போதும் இந்திய உதவி கிடைத்திருக்காவிடின் இலங்கையால் இந்தளவு சீக்கிரம் மீண்டிருக்க முடியாது.

எனவே, எதிர்வரும் நாட்களிலும் பொருளாதாரத்தில் இருந்து மீள்வதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும்.

ஆகவே, இலங்கைக்கு ஆதரவாக இந்தியாவின் தொடர் ஒத்துழைப்பு அவசியம் என கோரிக்கை விடுத்தார்.

இதன் பின்னர் டில்லிக்கு விஜயம் செய்யுமாறு எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு அழைப்பு விடுத்தார்.

சந்திப்பில் பங்கேற்றிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் விஜயத்திற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு பிரதமர் மோடி இதன்போது ஆலோசனை வழங்கினார். (நி-8)

## ஜனாதிபதி வியட்நாம் விஜயம்



(கொழும்பு)

சர்வதேச வெசாக் தினத்தில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி திங்கட்கிழமை வியட்நாம் செல்கின்றார்.

"உலக அமைதி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான பௌத்த நுண்ணறிவு" என்ற தொனிப்பொருளில் 2025 சர்வதேச வெசாக் தினம் இம்முறை கொண்டாடப்படுகின்றது. சுமார் 80 நாடுகளின் பிரதிநிதிகள் சர்வதேச வெசாக் தினத்தில் பங்கேற்க உள்ளனர்.

ஹோ சி மின் நகரில் அமைந்துள்ள வியட்நாம் பௌத்த நிலையத்தில் நடைபெறவுள்ள சர்வதேச வெசாக் தினம் மற்றும் சர்வதேச அறிவியல் மாநாட்டில் சுமார் 1,000 சர்வதேச பிரதிநிதிகள் உட்பட 2,000 பேர் வரை பங்கேற்க உள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சில நாடுகளின் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ளனர். (நி-8)

## பண்டிகைக் காலங்களில் விசேட சோதனை நடவடிக்கை

### பாவனையாளர் அதிகாரசபை

(கொழும்பு)

பண்டிகைக் காலத்திற்காக மேற்கொள்ளப்படும் விசேட சோதனைத் திட்டத்தின் கீழ் கடந்த சில நாட்களில் 1200 சோதனைகளை நடத்தியுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

விடுமுறை நாட்களிலும் இரவு நேரங்களிலும் நடத்தப்படும் இந்த சோதனைகளின் போது, சம்பா மற்றும் கீரி சம்பா அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்யும் வியாபாரிகள் மற்றும் பண்டிகைக் காலத்தில் முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலையை உயர்த்த முயற்சிப்பவர்கள் மீது புலனாய்வு அதிகாரிகள் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

மேலும், அத்தகைய வியாபாரிகள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரசபை அறிவித்துள்ளது. (நி-8)

**புதிய வருஷ கைவிஷேசம்- வாக்கிய பஞ்சாங்கம்**

14.04.2025- சித்திரை 01- திங்கள்- முற்பகல் 9.09-9.56 மணிவரை
14.04.2025- சித்திரை 01- திங்கள்- முற்பகல் 9.59-10.31 மணிவரை
14.04.2025- சித்திரை 01- திங்கள்- பிற்பகல் 4.06-5.00 மணிவரை
16.04.2025- சித்திரை 03- புதன்- முற்பகல் 9.04-9.48 மணிவரை
16.04.2025- சித்திரை 03- புதன்- முற்பகல் 9.52-11.46 மணிவரை

**புது வருஷ கைவிஷேசம்- திருக்கணித பஞ்சாங்கம்**

14.04.2025- சித்திரை 01- திங்கள்- காலை 6.05-7.10 மணிவரை
14.04.2025- சித்திரை 01- திங்கள்- காலை 9.05-9.55 மணிவரை
16.04.2025- சித்திரை 03- புதன்- காலை 9.05-9.48 மணிவரை
16.04.2025- சித்திரை 03- புதன்- முற்பகல் 9.00-11.15 மணிவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலுப்பெறும் இந்திய-இலங்கை உறவு

# பிரதமர் மோடியின் வருகையும் மித்ர விபூஷண விருதும்

இந்தியா ஞானபூமி. இலங்கை சிவபூமி. இந்திய தேசத்தில் அமையப் பெற்ற, காலத்தால் முந்திய சிவாலயங்களை மன்னர் பெருமக்களே அமைத்தனர். உலகம் இன்னமும் வியந்து நோக்குகின்ற தஞ்சைப் பெருங்கோவிலை இராஜராஜ சோழன் கட்டுவித்தான்.

அதன் வானுயர்ந்த கோபுரத்தின் நிர்மாணிப்பு விஞ்ஞான உலகை வியக்க வைத்துள்ளது. இதேபோல, இமயம் முதல் குமரி வரை அகண்ட பாரதம் இந்து சமயத்தின் விளைபூமி.

இந்தியாவின் தேசபிதா மகாத்மா காந்தியடிகள் மிகச் சிறந்த இறை பக்தியாளர். கோட்சே என்பான் காந்தியடிகளைத் துப்பாக்கியால் சுடுகின்ற போது, **ரகுபதி ராகவ ராஜாராம்...** என்ற இராம நாம கீர்த்தனையே காந்தியடிகளின் இறுதி நாமார்ச்சனையாயிற்று.

ஆம், புனித ஸ்தலங்களும் புண்ணிய நதிகளும் சீவன்முத்தர்களும் சித்தர்களும் ஞானயோகிகளும் உற்பவமாகும் இந்திய தேசத்தின் பிரதமராக இருந்த அன்னை இந்திராகாந்தி, உருத்திராட்ச மாலையைக் கழுத்தில் அணிந்து கொண்டே நாட்டை ஆட்சி செய்தார்.

மத சார்பற்ற நாடாக இந்தியா இருக்கின்ற போதிலும் இந்துக்களின் ஞானபூமியாகிய இந்தியாவில் இருந்து இந்து சமயத்தை பிரிக்கவோ தவிர்க்கவோ முடியாதென்பது நிறுதிட்டமான உண்மை.

## பாரதிய ஜனதா ஆட்சி

உலகின் இரண்டாவது சனத்தொகையை உடைய இந்தியா உலகின் முதலாவது ஜனநாயக நாடு. அணி சேராமை அதன் கொள்கை. தர்ம சக்கரம் அதன் வாழ்வு. அன்னை இந்திராகாந்தி அறிவித்த அவசரகால நிலைமையைத் தவிர, இந்திய ஜனநாயகத்தில் எந்தப் பழுதும் இல்லை.

பல்லின மக்களையும் பல மொழிகளையும் மதங்களையும் தன்னகத்தே கொண்ட இந்திய தேசத்தின் தேசிய கீதம் வங்கத்து மொழியில் அமைந்ததோடு இந்து, இஸ்லாம், சீக்கியம், பழங்குடி, ஹரிஜனம் என எந்தப் பேதமும் இல்லாமல் குடியரசுத் தலைமையில் அமரக் கூடிய சமத்துவமும் அப்பெரும் தேசத்தில் இருப்பது பெரும் சிறப்பே.

இதை இங்கு கூறுவது இந்திய தேசத்தின் சமத்துவத்தை-அதன் ஜனநாயகச் சிறப்பை விழிப்பதற்காகவன்று.

மாறாக, இந்தியாவின் அண்டை நாடான மிகச்சிறிய இலங்கைத் தீவில் இருக்கக்கூடிய இன, மத, மொழி வக்கிரத்தைக் சுட்டுவதற்கே இக் குறிப்பாகும்.

ஆம், 1978 இல் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன செய்த முதல்வேலை; உலகின் முதற் பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்ற ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமையை பறித்த தாகும்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டு வந்து இந்த நாட்டை நாசமறுத்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சியே இலங்கையில் அழிந்து போன பழம்பெரும் அரசியல் கட்சிகளில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

இதையும் கடந்து நிறைவேற்று அதிகார முடைய ஜனாதிபதி ஆட்சி முறையால் இந்த நாடு ஜனநாயகத்தை இழந்து போகும் என்ற உண்மையை ஜே.ஆர்.ஜெயவர்த்தன உணர்ந்து கொண்டாலும் இலங்கையில் ஜனநாயகம் அழிந்தாலும் பரவாயில்லை தனது ஆட்சிக்கு எந்தப் பங்கமும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வதிலேயே அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

அதன் விளைவை இப்போது நாடு அனுபவிக்கின்றது. இதையும் கடந்து, ஆட்சி மாற்றம் என்ற சிந்தனை மக்களிடம் ஏற்படுவதற்கும் ஜே.ஆரின் நிறைவேற்று அதிகாரமே காரணம் என்பது இங்கு உணர்தற்குரியது.

இஃது ஒரு புறமிருக்க, ராஜீவ் காந்தியின் மரணத்திற்குப் பின்பான இந்தியக் காங்கிரஸின் செல்வாக்கு இறங்கு முகமாயிற்று என்பதை ஏற்றுத்தானாக வேண்டும். மன்மோகன்சிங் பொருளாதார விற்பன்னராக இருந்த போதிலும் அவர் ஒரு சிறந்த தலைவர் என்ற பெருமையைப் பெறவில்லை. அதற்கு சோனியா காந்தியும் காரணம் என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

உண்மை. இத்தாலி தேசத்தைச் சேர்ந்த சோனியா காந்தி, நரசிம்மராவ், மன்மோகன்சிங் போன்ற இந்தியப் பிரதமர்கள் சுதந்திரமாக இயங்குவதைத் தடை செய்தார். இந் நிலைமையானது பாரதிய ஜனதாக் கட்சிக்கு சாதகமான சூழ்நிலையைக் கொடுத்தது.

அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு பின்னர் பாரதிய ஜனதாக் கட்சியிலிருந்து நரேந்திரமோடி அவர்கள் இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்றார்.

பிரதமர் நரேந்திர மோடியின் அணுகு முறையானது உலகத் தலைவர்கள் அவரிடம் இருந்து நிறையவே கற்க வேண்டும் என்பதை சுட்டிநிற்கின்றது.

எந்த நாட்டுத் தலைவரையும் ஆரத்தழுவி அணைக்கின்ற அவரின் நட்பு அப்பளுக்கற்றது. ஆம், சம நேரத்தில் ரஷ்ய அதிபருடனும் உக்ரைன் நாட்டு ஜனாதிபதியோடும் நட்புப் பாராட்டுகின்ற மிக உயர்ந்த ஆத்ம பலம் பிரதமர் மோடியிடம் உண்டு.

அதன் காரணமாகவே இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை பிரதமர் மோடி ஆட்கொண்டார்.

தவிர, இந்தியாவுடன் அவ்வளவு உடன் பாட்டைக் கொண்டிராத ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கையினால் மித்ர விபூஷண விருதைப் பிரதமர் மோடி பெற்றார் எனில், அண்டை நாடுகளுடன் அவர் கொண்டுள்ள நட்பும் அப்பளுக்கற்ற உறவும் எத்துணை உயர்வானதென்பது இங்கு நிரூபணமாகின்றது.

## மோடி உரைத்த குறள்

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்த பிரதமர் மோடி இங்கு உரையாற்றுகையில், சிங்களத்தில் **ஆயுபோவன்** என்றும் தமிழில் **வணக்கம்** என்றும் விழித்துப் பேசினார்.

தனது பேச்சில் வள்ளுவப் பெருமானார் தந்த

**செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்**
**வினைக்கரிய யாவுள காப்பு**

என்ற திருக்குறளைக் கூறித் தனது உரையை ஆற்றினார். மேற்குறித்த குறள் தரும் பொருள்; எதிரிகளிடம் இருந்து பாதுகாப்புப் பெற, நல்ல நண்பனும் நல்ல நட்பையும் தவிர பாதுகாப்பு அரணாக வேறு என்ன இருக்க முடியும் என்பதாகும்.

ஆக, எதிரிகளை வெல்லவேண்டுமாயின் நல்ல நண்பனும் நல்ல நட்பும் தேவை. அதாவது இந்தியாவின் அண்டை நாடான இலங்கை எப்போதும் இந்தியாவின் நண்பனாகவும் நட்பு நாடாகவும் இருக்க வேண்டும். அதுபோல இந்தியாவும் இலங்கைக்கு அவ்வாறே. இவ்விதம் இரண்டு நாடுகளும் நட்போடு இருக்கும்கால் எந்த எதிரிகளாலும் எதுவும் செய்ய முடியாது.

இதை இலங்கை புரிந்து கொள்ள வேண்டும். இலங்கை புரிந்து கொண்டால் இலங்கையின் பாதுகாப்பு அரணாக இந்தியா இருக்கும் என்பதை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி மிக நுட்பமாக எடுத்துக் கூறியுள்ளார்.

தவிர, பிரதமர் மோடி தமிழகத்திற்கு விஜயம் செய்யும் போது எங்ஙனம் தமிழில் உரையாற்றுவாரோ அது போல அவர் இலங்கைக்கு வருகை தந்த போதும் தமிழை முன்னிலைப் படுத்தினார்.

அதாவது, பிரதமர் மோடியைப் பொறுத்த வரை இலங்கை, தமிழ் பேசுகின்ற மக்களின் நாடு என்ற உணர்வோடு இருக்கின்றார் என்பதை இதனூடு புரிந்து கொள்ள முடிகிறது.

■ விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SLIIT உயர்கல்வி நிறுவனத்தின் இளமாணி

## பட்டப்படிப்புகளுக்கான அனுமதிகள் ஆரம்பம் - 2025




**வடக்கில் தரமான கல்வியுடன் உறுதியான வேலை வாய்ப்பு**
**எமது NORTHERN UNI இல் மட்டுமே!**

### BSc (Hons) in Information Technology - Specialising in

- Information Technology
- Computer Systems and Network Engineering
- Software Engineering
- Data Science
- Cyber Security
- Interactive Media
- Information Systems Engineering

### Top-Up, (1 Year) (University of Bedfordshire,UK) BSc (Hons) in

- Computer Science
- Software Engineering
- Computer Networking

### BBA(Hons) Specialising in

- Accounting and Finance
- Business Analytics
- Human Capital Management
- Business Management
- Logistics and Supply Chain Management
- Marketing Management

### Certificate Courses (40 Hours)

- Business English
- Personal and Professional Development
- Accounting Application Software

### Graduate Studies & Research

PGDE , MSc , MBA , MEd

### Foundation Programmes (1 Year)

- Certificate in Information Technology
- Certificate in Business Management

SLIIT NORTHERNUNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna

For more information 021 7534 807

(C-2677)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலருக்கும் புளியைக் கரைத்த பிள்ளையான் கைது!

அபிமன்பு

பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவனேசதுரை சிந்திரகாந்தன் கடந்த 8 ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டிருப்பது நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக, இராஜாங்க அமைச்சராக இருந்த பிள்ளையான் மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் பல்வேறு குற்றங்களில் ஈடுபட்டிருந்தார் என்ற செய்திகள் வெளிவந்த வண்ணமே இருந்தன.

ஆயினும் பிள்ளையான் மீது எந்த அரசாங்கமும் விசாரணைகளைத் தொடராத நிலையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு பிள்ளையானைக் கைது செய்துள்ளது.

ஆரம்பத்தில் பிள்ளையான் ஏன் கைது செய்யப்பட்டார் என்ற விபரங்கள் வெளியாகியிருக்காத போதிலும் கடந்த வியாழக்கிழமை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால பிள்ளையானின் கைது தொடர்பில் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

2019ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இலங்கையை மட்டுமல்லாது உலக நாடுகளையே உலுக்கியிருந்தது.

குறித்த தாக்குதலுடன் தொடர்புடையவர்களை இதுவரை வெளிப்படுத்தப்படாத நிலையில் பொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சர், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் பிள்ளையான் தொடர்புபட்டு இருக்கிறார் என தெரிவித்த கருத்து மேலும் கொதிநிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரிகளை வெளிப்படுத்தப்பட வேண்டும் என பேராயர் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் தேசிய மக்கள் சக்தி அரசிற்கு அவகாசம் வழங்கிய நிலையில் பிள்ளையானின் கைதும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கருத்தும் முக்கியம் பெறுவதாக அமைந்துள்ளது.

இதுதவிர கிழக்கு மாகாண பல்கலைக்கழக துணைவேந்தரை காணமல் ஆக்கிய சம்பவத்திலும் பிள்ளையான் நேரடித் தொடர்பு கொண்டுள்ளார் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்திருக்கின்றனர்.

தவிர, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர்களை அரசாங்கம் விரைவில் கைது செய்யும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார்.

இங்குதான் நாம் ஒரு விடயத்தை கவனித்தாக வேண்டும்.

அதாவது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பிள்ளையானிடம் அரசு விசாரணைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் தாக்குதலை மேற்கொள்ள கட்டளையிட்டவர்கள் யார் என்ற மிகப்பெரும் உண்மை புலனாக வாய்ப்புக்கள் அதிகம்.

இந்நிலையில் பிள்ளையானின் கைது கடந்த கால ஆட்சியாளர்களுக்கு வயிற்றில் புளியைக் கரைத்திருக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை.

ஏனென்றால் எய்யப்பட்ட அம்பு பிள்ளையான். இதில் எய்தவர் யார் என்பதே மக்களின் பெரும் கேள்வியும் எதிர்பார்ப்புமாக அமைந்துள்ளது.

பிள்ளையான் கைது செய்யப்பட்டதையடுத்து கிழக்கு மாகாணத்தில் சில இடங்களில் பொது மக்கள் பட்டாசுகளைக் கொளுத்தி தமது ஆரவாரத்தைத் தெரிவித்ததாக இணையங்களில் பல தகவல்களும் இடம்பெற்றிருந்தன.

எது எவ்வாறாயினும் அரசாங்கம் கூறுவது போல உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் பிள்ளையானுக்கு தொடர்பிருப்பது உண்மையெனின், அதனூடாக இக்கொடும் தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்டவர்களையும் கைது செய்து வெளிச்சத்துக்கு கொண்டு வர வேண்டும்.

கடந்த கால அரசுகளின் வீழ்ச்சிக்கான மிக முக்கியமான காரணியாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காணப்படுகின்றது.

இதில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களை உடன் வெளிச்சத்துக்குக் கொண்டுவாருங்கள் இல்லையேல் ஐக்கிய நாடுகள் சபை வரை செல்ல வேண்டிய நிலை வரும் என பேராயர் கர்த்தினால் ரஞ்சித் ஆண்டகை கடந்த அரசுகளுடன் முட்டி மோதியதும் இங்கு கவனிக்கத்தக்க விடயம்.

நிலை இவ்வாறு இருக்கையில் கைது செய்யப்பட்ட பிள்ளையான் கடந்த ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில் ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வி ஒன்று வைரலாகி வருகிறது.

இதில் அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தொடர்பில் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு "அநுர குமார திஸாநாயக்க தன்னிடம் ஆயுதம் கேட்டதாகவும் தான் கொடுக்க மறுத்துவிட்டதாகவும்" அதற்கு தகுந்த ஆதாரம் தன்னிடம் இருப்பதாகவும் கூறியிருந்தார். குறித்த காணொளி இணையத்தில் தற்போது வைரலாகி வருகின்றமை ஏதோவொரு செய்தியை சொல்வதாயே அமைந்துள்ளது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த போர்க் குற்ற மீறல்களுக்கான போதிய ஆதாரங்கள் இருந்தும் இன்றுவரை அதில் தொடர்புடையவர்களை பாதுகாக்கும் தோரணையில் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது அரசாங்கம்.

அவ்வாறான சூழ்நிலையில் பட்டலந்த வதை முகாம் விவகாரத்திற்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விடயத்திற்கும் அரசு கொடுக்கும் முக்கியத்துவத்தில் சிறு பங்கையேதும் தமிழின அழிப்பின் கொடூரத்திற்கு தொடர்புடையவர்கள் பக்கம் திருப்பினால் அது நியாயமானதாக அமையும். இல்லையேல் சிறுபான்மையினத்திற்கு எவரும் எதுவும் செய்யலாம். அதை எவரும் எதிர்த்துக் கேள்வி கேட்கமாட்டார்கள் என்ற பேரினவாத சிந்தனை இந்த நாட்டை ஒட்டு மொத்தமாய் அழித்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பிணர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிறக்கின்ற விசுவாவசு புத்தாண்டு எல்லோருக்கும் வளமாகவும் நலமாகவும் அமைய எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி அனைவருக்கும் எமது தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு பண்டிதர் கூற, விதானையார் விசுவலிங்கம் எழுந்தார்.

எங்கட தாயகத்தில உள்ள இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவது தொடர்பில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேணும்.

தற்போது தனியார் பல்கலைக்கழகங்களில பட்டப்படிப்புகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் நிறைய கிடைத்துள்ளன.


அதுபோல திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்தியத்திலும் நம் பிள்ளைகள் பட்டப்படிப்புகளை மேற்கொள்வதற்கு நிறைந்த கற்கை நெறிகள் உள்ளன.

இதுபோல உயர் தொழில் நுட்ப நிறுவகம், தொழில் நுட்பக் கல்லூரி, தொழில் பயிற்சி நிறுவனங்கள் என்பவற்றிலும் பாடசாலைக்குப் பின்பான படிப்புகளை மேற்கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன.

இருந்தும் இந்தச் செய்திகள் எங்கள் தாயகத்திலுள்ள அடிமட்டக் கிராமத்திலுள்ள இளைஞர் யுவதிகளுக்குச் சென்றடையவில்லை.

இதனால் தற்போதிருக்கக் கூடிய கற்றல் வசதிகள், எங்கள் கிராமத்துப் பிள்ளைகளுக்குக் கிடைக்கவில்லை. எனவே இது தொடர்பில் போதுமான விழிப்புணர்வும் வழிகாட்டல்களும் எங்கள் மாணவர்களுக்குக் கிடைக்க வேணும்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் அரச நிர்வாகங்களும் நடவடிக்கை எடுக்கவேணும்.



## கே.கே.எஸ் ஜனாதிபதி மாளிகை யார் கைக்குப் போகப் போகுது

***சாத்திரியார்:-*** அது சரி விதானையார், கணிசமான பிள்ளைகள் தனியார் பல்கலைக் கழகங்களில படிக்கினம் தானே.

***விதானையார்:-*** சாத்திரியார், தனியார் பல்கலைக்கழகங்களில பட்டப் படிப்பை மேற்கொள்வதற்குப் பல இலட்சம் ரூபாய் தேவை. வசதி படைத்தவர்களும் வெளிநாடுகளில நெருங்கிய உறவுகள் இருக்கக் கூடிய குடும்பத்துப் பிள்ளைகளுமே தனியார் பல்கலைக் கழகங்களில படிக்கக் கூடியதாக இருக்குது.

உண்மையில எங்கட இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்குமாக இருந்தால், அவர்கள் வேலை செய்து கொண்டு பகுதி நேரமாகப் பட்டப்படிப்புகளை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புகள் ஏற்படும்.

வேலை இல்லாத போது, எல்லாமும் வீணாகிப் போகுது.

இவ்வாறு விதானையார் விசுவலிங்கம் தனது கருத்தை முன் வைக்க, ஆலடி நிசப்தமாகியது. நிசப்தத்தைக் கலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

***கங்காணி:-*** அது சரி காங்கேசன்துறையில அமையப் பெற்ற ஜனாதிபதி மாளிகையின் நிலைமை எப்படி இருக்குது.

***மூப்பர்:-*** காங்கேசன்துறையில் அமையப் பெற்ற ஜனாதிபதி மாளிகையை வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன் அவர்கள் பொறுப்பேற்க வேண்டுமென அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரி கூறியிருந்தார்.

ஆனால் அது தொடர்பில எங்கட ஆட்கள் கருசனை காட்டாமல் இருந்தினம். இப்ப அந்தக் கட்டடம் உரிய பராமரிப்பு இல்லாமல் கிடக்குது.

இந்த நிலையில யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திட்ட அதனைக் கையளிக்க வேணும் எண்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பில எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் கோரிக்கைக் கடிதங்களை சம்பந்தப்பட்டவர்களிட்டக் கையளித்த போதிலும் அந்த விடயம் இன்னும் நடந்தாகவில்லை.

***கங்காணி:-*** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கேட்டால் அதனைக் குடுக்கலாம் தானே!

***மூப்பர்:-*** காங்கேசன் துறையில உள்ள ஜனாதிபதி மாளிகையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குக் கொடுப்பதில பிரச்சினை இல்லை.

ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அதை புறப்போசலாக எழுதிக் கொடுக்க வேணுமாம்.

எனினும் அந்த வேலை நடக்காத காரணத்தால நிலைமை இன்னமும் இழுபறியாகத்தான் இருக்குது.

***சிறாப்பர்:-*** எதுவா இருந்தாலும் முந்திக் கொள்ள வேணும். இல்லையெண்டால், அது இன்னொரு கைக்கு மாறிப்போகும்!

***வாத்தியார்:-*** பொதுவில எல்லாருக்கும் வீட்டுக்குப் பக்கத்தில வேலை செய்யிறது தானே விருப்பம்.

ஆகையால காங்கேசன்துறைக்குச் சென்று வேலை செய்யிறதில உடன்பாடு இல்லாதிருக்கலாம்.

இந்தாப்பாருங்க எங்கட தீவகம் இண்டைக்கு தேடுவாரற்றுக் கிடக்குது.

தீவகத்தை முன்னேற்ற வேணும் எண்டு நினைத்திருந்தால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர ஒரு பீடத்தை அல்லது தேசியக் கல்வியியல் கல்லூரியை அல்லது கடற்றொழில் சார்ந்த கற்கை நெறிகளை தீவகத்தில ஆரம்பித்திருக்கலாம்.

ஆனால் அது எதுவும் நடக்கவில்லை எனும் போது, வீட்டிற்குப் பக்கத்தில வேலை செய்த சுகம் ஒருத்தரையும் பரந்து சிந்திக்க விடுகுதில்லை.

இவ்வாறு வாத்தியார் கூற, ஆலடி மாநாடு நிசப்தமாகியதுவே.

நிசப்தத்தைக் கலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

***சாத்திரியார்:-*** ஓ! இப்படித் தானே, இந்திய அரசு யாழ்ப்பாணத்தில அமைத்த கலாசார நிலையத்தைப் பொறுப்பேற்பதற்கு யாழ்.மாநகர சபை தயங்கியது. பராமரிப்புச் செலவு அதிகமாக இருக்கும் எண்ட கோதாவில கலாசார மையத்தைப் பொறுப்பேற்காமல் விட, இப்ப அதை யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத்துணைத் தூதரகம் தான் பராமரிக்குது.

ஆகையால எப்பவும் எங்களைத் தேடி வரக் கூடிய வாய்ப்புக்களை நாங்கள் ஒரு போதும் நழுவ விடக் கூடாது.

இவ்வாறு சாத்திரியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

0076 097 3126

என்ற இலக்கத்திற்கு SMS, Whats App செய்யுங்கள்



எம் இளையோர் தொலைபேசி விளையாட்டுக்களில் மூழ்கிக் கிடக்கின்றனரே

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தொடர் தோல்விக்கு என்ன காரணம் வியாசரே?

**நாணயங்களில் பெரிய நாணயம் எது வியாசரே?**

தவராஜன்-கொற்றாவத்தை

பணத்திற்கு நாணயம் என்ற பெயர் எதனால் வந்தது என்று எப்போதாவது சிந்தித்திருக்கிறீர்களா?

ஒருவர் நேர்மையான வழியில் உழைத்தால் அதற்குக் கிடைக்கும் வெகுமானம் (பணம்) அதுதான் நாணயம்.

இதை இப்போது பலர் குறுக்கு வழியில் தேடிக் கொள்கிறார்கள். அப்படித் தேடும் செல்வம் ஒரு நாளும் நிலைத்திடாது.

உண்மை, நேர்மை வழி எவன் செல்கிறானோ அவனே நாணயமானவன் அவன் பக்கமே இறைவன் இருப்பான்.

**சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தொடர் தோல்விக்கு என்ன காரணம் வியாசரே?**

பிரவீஸ்-பருத்தித்துறை

டோனி என்கின்ற பிரமாண்டத்தை வைத்து இவ்வளவு காலமும் ஐ.பி.எல்லை உச்சத்துக்குக் கொண்டு சென்று விட்டார்கள்.

அத்துடன், அவர் தலைமை தாங்கும் சென்னை அணி வெற்றிகளை மட்டுமே பெற வேண்டும் என்ற அதீத எண்ணம் ரசிகர்களிடம் உருவாகி விட்டது.

இவை அனைத்தையும் தாண்டி, இளம் வீரர்களை உள்வாங்காமல் மீண்டும் மீண்டும் அதே பழைய முகங்களை களம் இறக்குகிறது சென்னை நிர்வாகம்.

ஏனைய அணிகளுடன் ஒப்பிடும் போது சென்னை அணியில் இளம் வீரர்கள், அறிமுக வீரர்கள் என்று எவரும் இல்லாதது மிகப் பலவீனமானது.

**நம்பிக்கைத் துரோகம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் வியாசரே?**

கஸ்யந்தினி-வசந்தபுரம்

இந்த உலகில் நடந்த அத்தனை அழிவுகளுக்கும் மூலகாரணமாக அமைவது நம்பிக்கைத் துரோகமே.

எவராலும் வீழ்த்த முடியாத கட்டமைப்பு, மன உறுதிமிக்க விடுதலைப் புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டது கூட நம்பிக்கைத் துரோகத்தால் தானே.

ஆயுத பூசை அன்று கட்ட பொம்மன் போர் புரிய மாட்டான் என்று வெள்ளையர்களுக்கு தகவல் கூறி கட்டப்பொம்மன் என்ற ஒப்பற்ற வீரனை கைது செய்ய வைத்ததும் எட்டப்பன் என்ற ஒருவனின் நம்பிக்கைத் துரோகமே.

**சம்பள அதிகரிப்பிற்கா அல்லது உற்பத்திக்கா நாட்டின் வளங்களைப் பயன் படுத்த வேண்டும் வியாசரே?**

ரஜினி-சங்கானை

உற்பத்தியை அதிகரிக்கும் போது அது நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும். பொருளாதாரம் முன்னோக்கிச் செல்லும் போது சம்பள அதிகரிப்புக்கள் சாத்தியமான தாகும்.

ஆனால் உற்பத்திகளை ஊக்குவிக்காமல் தேர்தல் வாக்குறுதிகளுக்காக சம்பள அதிகரிப்பைச் செய்து நாட்டைக் குட்டிச் சுவாராக்கி விட்டார்கள் முன்னைய ஆட்சியாளர்கள்.

இந்நிலையில் நாட்டின் உற்பத்தியை அதிகரிப்பதே நாட்டின் வளர்ச்சியை உறுதிப்படுத்தும்




**ஊழலில் ஈடுபட்ட தமிழ் தரப்புக்கள் என தமிழர்கள் கைது செய்யப்படுகிறார்கள், ஏன் சிங்களவர்கள் இன்னமும் கைதாக வில்லை வியாசரே?**

சுதன்-குப்பிளான்

ரால் போட்டு சுறாப்பிடிப்பது என்றொரு சொல்லாடல் உண்டல்லவா. அதுதான் நடக்கப் போகிறதோ அல்லது ஒட்டுமொத்த விளையாட்டையும் தமிழ் தரப்பே செய்தது என கோவையைக் குளோஸ் பண்ணப் போகிறார்களோ தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.

**எதிர்காலம் குறித்து விசுவாசம் நமக்குத் தேவையா வியாசரே?**

குமார்-யாழ்ப்பாணம்

நான் கூறுவது 1995 ஆம் ஆண்டு காலப்பகுதி. தேசத் துரோகிகள் என அடையாளப்படுத்தியவர்களுக்கு வீதியில் வைத்து மரண தண்டனை வழங்கும் காலம்.

தாண்டிக்குளம் பகுதியில் ஒருவருக்கு தண்டனை வழங்கத் தயாராகிறார்கள்.

கைகள் பிணைக்கப்பட்டவரின் கைகளை அவிழ்த்து விட்டதும் அவர் தனது சாரத்தை நேர்த்தியாக மடித்து கட்டி விட்டு அமைதியாக நின்றார்.

டுமில்.. சரிந்து வீழ்ந்த அவரின் சாரம் குலையாமல் நேர்த்தியாகவே இருந்தது.

தான் இறந்த பிறகும் தன் மானம் போய்விடக்கூடாது என நினைத்திருந்தார் அவர்.

(அவர் தவறு செய்தவரா, இல்லையா என்பது இவ்விடத்தில் விவாதிக்கவில்லை)

**எம் இளையோர் தொலைபேசி விளையாட்டுக்களில் மூழ்கிக் கிடக்கின்றனரே?**

சாயிசெல்வம்-பருத்தித்துறை

அண்மையில் ஒரு காணொளி பார்த்தேன். என்னை அறியாமலேயே என் கண்களிலிருந்து கண்ணீர் வந்து விட்டது.

ஆம், பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க ஒரு பிள்ளை தொலைபேசியில் மூழ்கிக் கிடக்கிறது.

கொடுமை என்னவெனின் அந்தப் பிள்ளையின் வாய், கண், காது போன்றவற்றில் இலையான்கள் மொய்த்து கொண்டிருக்கின்றன.

ஆனால் அந்தப் பிள்ளை அதைப் பொருட்படுத்தாமல் தொலைபேசியில் விளையாடிக் கொண்டிருக்கிறது.

எம் அடுத்த சந்ததி தொழில்நுட்பம் எனும் இரும்புக் கரத்துக்குள் மாண்டு போகப் போகிறது என்பது மட்டும் புரிகிறது.

**காரணம் இன்றிக் காரியம் இல்லை என்பதன் அர்த்தம் என்ன?**

சி.மகாலட்சுமி-கொக்குவில்

அம்மா: தம்பி கடைக்குப் போய் ஒரு கிலோ சீனி வாங்கி வா

மகன்: இல்லையம்மா நான் படிச்சுக் கொண்டிருக்கிறன்.

அம்மா: மிச்சக் காசுக்கு சொக்லேட் வாங்கலாம்.

மகன்: அம்மா ஒரு கிலோ சீனி மட்டும் போதுமா? இன்னும் ஏதும் வாங்க வேணுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொக்கிஷக் கவிதை

15.06.1967ஆம் ஆண்டு மல்லிகை இதழில் வெளியான கவிதை

## என்னைக் கொன்றுவிட்டாள்



தண்ணீர்க் குடத்தை இடுப்பில் வைத்தாள் - அவள்
தண்டை ஒலிக்க நடைநடந்தாள்
கண்ணின் கடைவிழி ஓரத்திலே - அவள்
காதலால் என்மனம் கிள்ளிச் சென்றாள்

பெண்ணின் குலத்திற்குப் பொற்குடமோ? - அவள்
பொற்குடத்தில் இட்ட பொட்டதுவோ
பண்ணின் இனிய சுவையவளோ? - நல்ல
பருவ எழில் தவழ் பைங்கொடியோ?

தாமரைப் பூம்பாதம் முன்நடக்க - அந்தத்
தையலவள் மனம் பின்னிழுக்க
பூமலர்முகமும் நாணம் கொள்ள - ஒரு
புன்னகையால் எனைக் கொன்றுவிட்டாள்.

பின்னல் நெளிந்தாடப் பூவுமாட - அவள்
தன்ன கமும் ஊஞ்சல் தானாட
மின்னலென வந்து என்னகத்தில் ஒளி
மின்னி மிளிர்ந்தோடிச் சென்றுவிட்டாள்.

ஒய்யாரமாய் ஒருகையை வீசி அவள்
ஓரக்கண்ணால் காதல் ஜாடைபேசி
மையாலெழுதும் புருவம் வளைத் - தேளந்தன்
மையலை மூட்டி அத்தையல் சென்றாள்.

தேமதுரவிதழ் செந்தமிழோ? - இன்பச்
செந்தமிழின் சுவை தெள்ளமுதோ?
மாமதுக் கன்னங்கள் மாம் பழமோ? - அந்த
மங்கை சுமப்பது தேன்குடமோ?

கன்னல் கவிதையாம் கள்ளியவள் - எனைக்
காணுவளோ கண்டு நாணுவளோ?
இன்னலகற்றிடும் இன்பத் தமிழ்க் - கன்னி
என்னுயிர்தான் கொண்டு சென்றனளே!

**யாழ்ப்பாணம் எஸ். வீரமணி**

## தாய்மையைப் போற்றுகிறேன்





அமைதியை நெஞ்சில் ஆழமாய் ஊற்றி
ஆனந்தச் சுடரினை நிலையாக ஏற்றி
இருப்பிடம் தேடி நீ இயல்பாகத் தூங்கு
ஈரைந்து மாதங்கள் துடிப்புடன் தாங்கு


உலகெல்லாம் இருபாலும் கொடுக்கின்ற தாய்மை
ஊட்டும்பால் உனக்கான பிள்ளைக்கு தூய்மை
எண்ணங்கள் எப்போதும் பிள்ளையை நோக்கும்
ஏதேனும் துயர் வந்தால் உன்னையும் தாக்கும்

ஐம்புலன்கள் திறன்பட அருகிருந்து வாதிப்பாய்
ஔவையின் ஆத்திசூடி பாலகர்க்குப் போதிப்பாய்
ஒருநாளும் உனக்காக வாழ்ந்திடாத தாயே
ஓராயிரம் வார்த்தைகளில் வாழ்கின்றாய் நீயே.

**வயலை ஆனந்தன் (எ.ஜே.உதயசேகரம்)**

# கவிதைக் கலசம்


## அடைக்கும் தாழில்லை அன்பிற்கு..!



அன்னை குழந்தையை அள்ளி அணைத்திடல்
அகத்தினில் பொங்கிடும் அன்பதனால்!
கன்னியர் காளையர் நெஞ்சத்தில் முகிழ்த்தே
காதல் மலர்வதும் அன்பதனால்!
கூட்டுக்குள் குஞ்சுக்கு வாயினால் உணவினை
ஊட்டுமே பறவை அன்பதனால்!
கூட்டுக்குள் குடும்பமாய் வாழும் உறவுகளுக்குள்
கூடிடும் பாசம் அன்பதனால்!
நண்பர்கள் நாமென்று செல்லியே உணர்வோடு
இன்பமாய்க் கைகோப்பர் அன்பதனால்!
தன்னிடம் உள்ளதைப் பகிர்ந்து கொடுத்திடும்
தன்னை எழுவதும் அன்பதனால்!
உள்ளம் கவர்ந்தவெம் உறவு பிரிந்திடில்
கண்கள் கலங்கிடும் அன்பதனால்!
கள்ளம் கபடமில்லா வாழ்வும் துலங்கிடும்
கயமை கலவாத அன்பதனால்
வெள்ளமாய் வேதனை தருகின்ற மகனையும்
தள்ளாது ஏற்கின்ற தயவு கனிந்திட
உள்ளக் கோயிலில் இடந்தர நினைப்பதும்
அள்ளக் குறையாத அன்னையின் அன்பன்றோ!

**இரா.தில்லைராஜன்**

## பள்ளி...



நாம் யாரோ அவர் யாரோ
நம் பள்ளியில்...
புதுமுகம் காட்டி உம்மிடத்தில்
புத்துணர்வுடன் உம் வாசலில்
புத்துயிராய் இவ் ஆசான்கள்

மழலை மனங்களில் கொள்ளை கொண்டு
மழலையாய் இம் மண்ணில்
நீர் கற்ற கல்வியை எமக்காய் தந்து
நிழலாய் எம் பின்னே நின்று
அன்பும் பண்பும் எம் மனங்களில் விதைத்து
அறிவுரைகள் பல கூறி
எம் முன்னேற்றத்தில் மகிழ்வுற்று
எம்மை வாழ்த்திடும் பள்ளியே.

**இ.பானுஷா.**
**யா/ மல்லாகம்**
**மகா வித்தியாலயம்.**

## படி... படி...!



அடிக்கடி படி ஆழப் படி!
பிடிப்புடன் படி பிரித்தறிந்து படி!
வாழப் படி வாழ்கையைப் படி!
பொறுப்பாய்ப் படி பொருளறிந்து படி!
தேடிப் படி தேடலுடன் படி!
கற்கப் படி கற்பிக்கப் படி!
தெரிந்து படி விரைந்து படி!
உணர்ந்து படி உலகறியப் படி!
வரலாறு படி வரலாற்றைப் படைக்கப் படி!
அறிவுச் சுடரேற்றப் படி அறம் செய்யப் படி!
பிறர் மதிக்கப் படி சிலரை மிதிக்கப் படி!
அன்பு ஒழுக்கம் நிலைக்கப் படி!
அதுவே அறமென்றெண்ணிப் படி!

**பா.விஷ்ணு. மாவை கலட்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி..வரி..வரி..
# ட்ரம்பிற்கு எதிராக மக்கள் போர்க்கொடி



அமெரிக்காவின் பரஸ்பர வரி விதிப்பால், உலக நாடுகளின் பங்குச் சந்தைகள் ஆட்டம் கண்டிருக்கும் நிலையில், டொனால்ட் ட்ரம்ப்பின் ஜனாதிபதி அரியணையே ஆட்டம் காணும் வகையில் மிகப்பெரிய போராட்டம் அமெரிக்காவில் நடைபெற்றிருக்கிறது!

ட்ரம்ப்பின் அடுத்தடுத்த சர்ச்சைக்குரிய அதிரடி அறிவிப்புகளால் மக்களிடையே கொந்தளிப்புகள் கிளம்பியிருந்த சூழலில், ஜனநாயகக் கட்சி ஆதரவாளர்களும், சமூக ஆர்வலர்கள் சிலரும் இணைந்து "ஹேண்ட்ஸ் ஆஃப் 2025" என்ற பெயரில் இணையத்தளம் ஒன்றைத் தொடங்கி, அதன் மூலம் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

ஹேண்ட்ஸ் ஆஃப் குழுவின் அழைப்பை ஏற்று,வோஷிங்டன், பாஸ்டன், நியூயோர்க், சிக்காகோ என அமெரிக்காவின் முக்கிய நகரங்கள் அனைத்திலும் ஆயிரக்கணக்கானோர் வீதியில் இறங்கிப் பேரணி நடத்தி, ட்ரம்ப் அரசுக்கு எதிராகக் கோஷமிட்டனர். அமெரிக்காவின் 50 மாகாணங்களிலும் நடந்த இந்தப் போராட்டத்தில் சுமார் 30 லட்சம் பேர் கலந்து கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

பரஸ்பர வரி விதிப்பு, விலைவாசி உயர்வு, பொருளாதாரப் பிரச்சினைகள், மற்ற நாட்டு விவகாரங்களில் மூக்கை நுழைப்பது, அரசு ஊழியர்களைப் பணிநீக்கம் செய்வது, குடியேற்ற விதிகளை மாற்றியமைப்பது என ட்ரம்ப்பின் பல்வேறு நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தப் போராட்டத்தில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் குறித்து ஏப்ரல் 4ஆம் திகதி பேசிய ட்ரம்ப், "என்னுடைய கொள்கைகள் எப்போதும் மாறாது..." என்றிருந்தார். போராட்டக்காரர்களோ, "ட்ரம்ப், தனது பைத்தியக்காரத்தனமான முடிவுகளால் அமெரிக்கப் பொருளாதாரத்தைச் சீர்குலைத்துக்கொண்டிருக்கிறார்"என்கின்றனர்.

தனக்கெதிராகப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில், வார இறுதி ஓய்வுக்காக, ஃபுளோரிடாவிலுள்ள தனக்குச் சொந்தமான ரிசார்ட்டுக்குச் சென்று கோல்ஃப் விளையாடிக்கொண்டிருந்தார் ட்ரம்ப். சர்வதேச அரசியல் நோக்கர்களோ, "போராட்டங்கள் தன்னை ஒன்றும் செய்துவிடாது என்பதைச் சொல்லும் நோக்கில், அவர் கோல்ஃப் விளையாடியிருக்கலாம். ஆனால், இந்தப் போராட்டம் அவருக்கு நிச்சயம் நெருக்கடியை உண்டாக்கியிருக்கிறது" என்கிறார்கள்.

ஜனவரி மாதத்தை ஒப்பிடும்போது, ஏப்ரல் மாதத்தில் ட்ரம்ப்புக்கான ஆதரவு அமெரிக்க மக்கள் மத்தியில் குறைந்திருப்பதாகச் சொல்கிறது "ராய்ட்டர்ஸ்" செய்தி நிறுவனத்தின் ஆய்வு. இந்தப் போராட்டத்துக்கு பின்பும், ட்ரம்ப் தனது போக்கை மாற்றிக்கொள்ளாவிட்டால், மீண்டும் போராட்டங்கள் வெடிப்பதோடு, ட்ரம்ப்பின் செல்வாக்கும் குறையும் என்பதில் சந்தேகமில்லை!

# ஆச்சி அறிவுரை



## அடுத்தவர் பொருளில் ஆசைப்படலாமா?

மாவை.நா.கஜேந்திரன்

### பேராண்டி...

றோட்டிலை கிடந்தால் எடு, உடையவன் கேட்டால் குடு, எண்டொரு ஊர்ப்பழமொழி இருக்குது.

அதாவது வீதியிலை ஏதாவது பொருள் இருந்தால் அதை அந்தப் பொருளுக்கு சொந்தக்காரன் கேட்டால் கொடுத்துவிடு எண்டுறது தான் அந்தப் பழமொழியின் பொருள்.

அப்பிடியெண்டால், அந்தப் பொருளின்ர உடையவன் கேக்காட்டி கொடுக்கத் தேவையில்லையோ எண்டுற அர்த்தமும் மறைமுகமா இருக்கெல்லோ?

வீதியிலை கிடக்கிற பொருளை கண்டு எடுத்தால், அதை அதுக்குச் சொந்தக்காரரிட்டை கொடுக்கவேணும். அதுதான் மனிதாபிமானம்.

தங்கட பெறுமதியான பொருட்களைத் தொலைச்சதுகள் எவ்வளவு அந்தரப்படுங்கள். அதுகளின்ர அந்தரத்தை நாங்கள் புரிஞ்சு கொண்டால், அடுத்தவையின்ர பொருளுக்கு ஆசைப்படுற மனம் வராது.

பேராண்டி! உன்ர கொப்பா சின்னப் பிள்ளையா இருக்கேக்க உன்ர தாத்தாவோட கீரிமலைக் கடலுக்கு குளிக்கப் போறவன்.

இது கிழமையிலை இரண்டு நாள் கட்டாயம் நடக்கிற காரியம்.

கீரிமலைக் கடலோடை ஒட்டியிருக்கிற தீர்த்தக் கேணியில தாத்தா குளிப்பர். உன்ர கொப்பா கேணியின்ர மேலதிக நீரை கடலுக்கு வெளியேற்றுற வாய்க்காலுக்குள்ளதான் குளிப்பான். ஏனெண்டால், அந்த வாய்க்கால் அவ்வளவு ஆழமில்லை.

ஒருநாள் கொப்பா வாய்காலுக்குள்ள குளிச்சுக் கொண்டிருக்கும் போது காலுக்குள்ள ஏதோ தட்டுப்பட, அதை எடுத்துப் பார்த்தால் அது ஒரு பெரிய தங்க மோதிரம்.

கொப்பா ஒரு நிமிடம் கூட தாமதிக்கேல்லை. இஞ்ச கடலுக்குள்ள இருந்து மோதிரம் ஒண்டு எடுத்தனான். இது யாருடையது? எண்டு அங்க நிண்டாக்களிட்ட கேட்டிருக்கிறான்.

உடனேயே மோதிரத்துக்குச் சொந்தக்காரர் மோதிரத்தை வேண்டினதோட, கொப்பாவையும் கூட்டிக்கொண்டு தாத்தாட்டை வந்து, உங்கட பிள்ளையை நல்லா வளர்த்திருக்கிறியள்.

இந்த வயசிலையே அடுத்தவையின்ர பொருளிலை ஆசைப்படாமல் அதை உரியவரிட்டை கொடுக்கிற பிள்ளையை பார்க்கச் சந்தோசமா இருக்கெண்டு பாராட்டினவை.

இதை உன்ர தாத்தா என்னட்டைச் சொல்லும் போது அவரின்ர கண்ணில இருந்து கண்ணீர் "பொல பொல" எண்டு ஓடிச்சுது.

நீ பள்ளிக்கூட மைதானத்திலை கிடந்த தோட்டுச் சுரை ஒண்டை எடுத்துக்கொண்டுபோய் அதிபரிட்டைக் கொடுத்தனி எண்டு உன்ர வகுப்பாசிரியர் கொம்மாவுக்குச் சொன்னவாவாம்.

அதைக் கேக்க, எனக்கு உன்ர கொப்பரின்ர நினைவுதான் வந்தது.

அடுத்தவரின்ர சொத்தை எடுத்து நல்லா இருக்கலாம் எண்டு நினைக்கிறதே தரித்திரம்.


அது காலாதி காலமா அந்தப் பரம்பரையையே உய்யவிடாது பேராண்டி.

ஆச்சி வருவா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கோடை வெயில்... ஆரோக்கியம் அவசியம்

கோடையைச் சபிக்கும் பலரும், அந்த சீசனில் மட்டுமே கிடைக்கும் பிரத்தியேக பழங்கள், காய்கறிகளுக்காக வெயிலை வரவேற்கக் காத்திருப்பார்கள். அந்தந்த சீசனில் கிடைக்கும் உணவுகளைத் தவறாமல் சாப்பிட வேண்டும். அவற்றின் மூலம் கிடைக்கும் ஆரோக்கிய பலன்களைத் தவறவிடக் கூடாது என்பது மருத்துவர்களின் பொதுவான அறிவுரையாகவும் இருக்கிறது. அந்தவகையில் கோடையில் கிடைக்கும் பிரத்தியேக உணவுகளின் சிறப்புகளையும் யாரெல்லாம் அவற்றை சாப்பிடலாம் ?




**தர்ப்பூசனி:** உடலில் நீர் வறட்சி ஏற்படாமல் காக்கக்கூடியது தர்ப்பூசணி. அதிக குளிர்ச்சியைத் தரும் என்பதால் ஆஸ்துமா நோயாளிகள் தர்ப்பூசணியைத் தவிர்த்தல் நல்லது.

**வெள்ளரி:** கோடையில் குளிர்ச்சியைத் தரக்கூடிய ஆகச்சிறந்த உணவு வெள்ளரி. இதிலும் உப்பு மற்றும் கனிமப் பொருள்கள் அதிக அளவில் உள்ளன. கோடைக்காலத்தில் சிறுநீரகக் கற்கள் உருவாகும் பிரச்சினை அதிகரிக்கும். ஆனால், அதன் குறி குணங்களும் வலியும் ஜூலை மாதத்துக்கு மேல் தான் தெரியும். எனவே, கோடை தொடங்கும்போதே தொடர்ந்து வெள்ளரியை எடுத்து வந்தால் சிறுநீர் பெருகும், சிறுநீரகக் கற்கள் உருவாவது தடுக்கப்படும். வெள்ளரிக்காயைப் போலவே வெள்ளரிப்பழமும் உடலுக்கு நன்மை பயக்கும்.



**பலாப்பழம்:** பலாப்பழத்தில் இனிப்புச் சுவை மிக அதிகம். இந்தப் பழத்தை சுவைக்காக எடுத்துக் கொள்ளலாம். இதில் பெரிய சத்துகள் கிடையாது. எனவே, பலாப்பழம் சர்க்கரை நோயாளிகளுக்கு நல்லதல்ல. பலாப்பழம் மாந்தத்தைக் கொடுக்கும் என்பதால் அதனுடன் சிறிது தேன் சேர்த்துச் சாப்பிடுவது நல்லது.



**நுங்கு:** உடலுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்து, வாய்ப் புண்கள் வருவதைக் குறைக்கக்கூடியது நுங்கு. பெண்களுக்கு வெள்ளைப்படுதல் பிரச்சினைக்கும் தீர்வளிக்கும். எடை குறைவான வர்களுக்கு உடல் எடை அதிகரிக்க உதவும். அதிகப்படியான உப்பு மற்றும் கனிமசத்துகள் கொண்டது நுங்கு. இதில் சோடியமும் பொட்டாசியமும் அதிக அளவில் உள்ளது. இயல்பாகவே வெயில் காலத்தில் நீருடன் சேர்ந்து கனிமசத்துகளும் உடலில் குறையும். எனவே, அவற்றை மீட்டெடுக்க நுங்கு உதவும்.



**நிச்சயம் வேண்டும் நீர்க்காய்கறிகள்:** கோடையில் நீர்ச்சத்துள்ள காய்கறிகளை அதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இவை எளிதில் ஜீரணமாகும். முருங்கை, அகத்தி போன்ற கீரைகளை விட தண்டுக்கீரை, முளைக்கீரை போன்றவை நீர்ச்சத்து அதிகம் உடையவை. எனவே, இவற்றை அதிகம் உபயோகிக்கலாம். பசளைக்கீரை, முளைக்கீரை, தண்டுக்கீரை மூன்றும் வெயில் காலத்துக்கு ஏற்றவை.

**வெட்டிவேர், நன்னாரி வேர் குடிநீர்:** மண்பானையில் தண்ணீர் ஊற்றி வெட்டிவேரை எடுத்துச் சுருட்டி ஒரு சின்னத் துணியில் முடிந்து உள்ளே போட்டு ஊறவைக்க வேண்டும். கோடையில் இந்தத் தண்ணீரைப் பருகுவது நன்மை பயக்கும். நன்னாரி வேரையும் இதே போல தண்ணீரில் ஊறவைத்துக் குடிக்கலாம். நன்னாரி சர்பத்தும் கோடைக்கு ஏற்ற பானம்.

**என்ஜாய் எண்ணெய்க் குளியல்:** கோடைக்காலத்தில் தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பது மிக அவசியம். இதுவரை எண்ணெய் தேய்த்துக் குளிக்காதவர்கள்கூட வெயில் காலத்தில் அதை வழக்கத்துக்குக் கொண்டுவர வேண்டும். தலையில் எண்ணெய் தேய்த்து ஒரு மணி நேரம் ஊறவைத்துக் குளிக்கலாம்.

# அனுபவங்கள் ஆயிரம்!

## முதியோர் இல்லம்... எப்படி உதவலாம்?



முதியோர் இல்லம், சிறுவர் இல்லம் என உதவி செய்ய நினைப்பவர்கள், அதை ஒருவேளை உணவாக மட்டுமே யோசிக்காமல்... சோப், பவுடர், கண்ணாடி, ஆடைகள், புத்தகங்கள், செய்தித்தாள்கள், பத்திரிகை சந்தா என்றும் யோசிக்கலாம்.

சம்பந்தப்பட்ட இல்லத்தினரிடமே அவர்கள் தேவை என்ன என்று கேட்டு செய்வது இன்னும் சிறப்பு. எல்லோருமே உணவு கொடுக்க நினைத்தால், அவர்களின் மற்றைய தேவைகள் நிறைவேற்றப்படாமல் போகலாம் அல்லவா?

## கலர் வாட்டர் பாட்டில்கள் VS கண்ணாடி பாட்டில்கள் எது ஓகே?



இன்று பலரும் பிளாஸ்ரிக் பெட்பாட்டில்களை கலர் கலராக வாங்குகின்றனர். அதை வீட்டு உபயோகத்துக்கும், குழந்தைகளுக்குப் பாடசாலைக்கு கொடுத்துவிடுகின்றனர். இந்த பாட்டில்களில் வண்ணங்களைத் தவிர்த்து பிளேனான, கண்ணாடி போல "டிரான்ஸ்பரன்ட்" (Transparent) ஆக இருக்கும் பாட்டில்களை வாங்கினால், பாட்டிலின் அடியில், மூடி பகுதியில் ஏதாவது அழுக்குச் சேர்ந்தாலும் "பளிச்" எனத் தெரிந்துவிடும். கவனித்து சுத்தப்படுத்திவிடலாம். தண்ணீரில் ஏதாவது தூசு இருந்தாலும் தெரிந்துவிடும். பரிசீலிக்கலாமே!



# சமைப்போம் சுவைப்போம்



## பீட்ரூட் பழப்பச்சடி

**தேவையானவை :**




1. பீட்ரூட் – 2
2. கனிந்த வாழைப்பழம் – 2
3. பாதாம், முந்திரி, தலா 15 கிராம்
4. தேங்காய் – கால் மூடி
5. பனை வெல்லம் – 50 கிராம்

**செய்முறை**

பீட்ரூட்டைச் சுத்தம் செய்து தோல் நீக்கி துருவிக்கொள்ளவும், வாழைப்பழத்தைப் பொடியாக நறுக்கிக்கொள்ளவும். தேங்காயைச் சிறு துண்டுகளாக்கிக் கொள்ளவும். பாதாம், முந்திரி, அக்ரூட்டைப் பொடியாக உடைத்து வைத்துக்கொண்டு ஒரு பெரிய பாத்திரத்தில் போட்டு மற்ற எல்லாப் பொருட்களையும் சேர்த்து நன்கு கலக்கிக் கொள்ளவும். அடுப்பில் வைக்கக்கூடாது.

பச்சையான பீட்ரூட் மற்றும் பனை வெல்லம் போன்றவற்றில் இருக்கும் சத்துகள் கான்சர் வரும் அபாயத்தைக் குறைக்கிறது. இரத்தத்தில் கலந்துள்ள கழிவுகளை நீக்கி உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும் தன்மை பீட்ரூட்டுக்கு உண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சனிக்கு 274 நிலாக்கள்!

ஒரே ஒரு நிலாவைப் பார்த்தே மனிதர்கள் கதைகள் சொல்கிறார்கள். அத்தனை கவிதைகள் எழுதுகிறார்கள். பெண்களோடு ஒப்பிட்டு வர்ணிக்கிறார்கள். அம்மாக்கள் அதைக் காட்டி குழந்தைக்குச் சோறு ஊட்டுகிறார்கள். ஒருவேளை சனி கிரகத்தில் நாம் வாழ்ந்தால் என்ன செய்திருப்போம்? ஏராளமான நிலாக்களைப் பார்த்துக் குழம்பிப் போயிருப்போம். ஆம். சனி கிரகத்தைச் சுற்றிவரும் 128 நிலாக்களைப் புதிதாக இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். ஏற்கெனவே சனி கிரகத்தை 146 நிலவுகள் சுற்றிவருகின்றன. இந்தப் புதிய நிலாக்களுடன் சேர்த்து சனிக்கு இப்போது 274 நிலவுகள் உள்ளன. சூரியக் குடும்பத்தின் அதிக நிலவுகள் கொண்ட கிரகமாக சனி உள்ளது.

சனிப்பெயர்ச்சி இந்த வாரம் நிகழ்ந்ததா. அடுத்த ஆண்டுதான் நிகழப்போகிறதா என்று ஜோசியர்கள் ஒரு பக்கம் விவாதம் நடத்துகிறார்கள். ஆலயங்களில் அறிவிப்புகள் வெளியிடுகிறார்கள். அஷ்டமத்துச் சனி. ஏழரைச் சனி. சனிப்பெயர்ச்சி பலன் என்று தன்னை வைத்து பூமியில் ஜோதிடர்கள் ஏதேதோ செய்வது தெரியாமல். தனக்கு சனி என்று மனிதர்கள் பெயர் வைத் திருக்கிறார்கள் என்பதையும் அறியாமல், பாவமாகத் தன் பாதையில் சுற்றிச் சுழன்று வருகிறது சனிக்கிரகம்.

சூரியக் குடும்பத்தின் பெரியண்ணன் வியாழனுக்குப் பிறகு மீசையை முறுக்கி விட்டு நடக்கும் அடுத்த அண்ணன் சனி. இந்தக் கிரகத்துக்கு ஏற்கெனவே 2 லட்சம் கிலோ மீற்றர் தூரத்தில் ஒரு பெரிய பாதுகாப்பு வளையம் இருக்கிறது. இது பல்லாயிரக்கணக்கான கி.மீ அகலம் கொண்டது. இந்த வளையத்தின் ஆழம் ஒரு கிலோ மீற்றர். பூமி சூரியனைச் சுற்றி வர 365 நாட்களை எடுத்துக்கொள்கிறது. ஆனால் சனி 29 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் சூரியனை ஒரு முழுச் சுற்று சுற்றி முடிக்கிறது. பூமியில் ஒரு நாள் என்பது 24 மணி நேரம். சனிக்கு வெறும் 11 மணி நேரம்தான்.

பூமிக்கு ஒற்றை நிலவு இருக்க. மற்ற கிரகங்களுக்கு வெவ்வேறு எண்ணிக்கையில் நிலவுகள் உள்ளன. வியாழனுக்கு 95 நிலவுகள் உள்ளன. யுரேனஸ்க்கு 28. நெப்டியூனுக்கு 16 நிலவுகள் உள்ளன. சனிக்கு ஏற்கெனவே இருக்கும் 146 நிலவுகளில் மிகப்பெரியது. டைட்டன் என்ற நிலா. இது புதன் கிரகத்தை விடப் பெரியது. மேகக் கூட்டங்கள். ஆறுகள். ஏரிகள். மீத்தேன் கடல் என ஒரு சாம்ராஜ்யமே இங்கு இருக்கிறது.

இந்த நிலாவின் மீது இருக்கும் ஆர்வம் காரணமாக, சனியை வானியல் அறிஞர்கள் எப்போதும் கண்காணித்து வருகின்றனர். அந்த வகையில்தான் சமீபத்தில் அதன் நூற்றுக்கும் அதிகமான நிலவுகளைக் கண்டு பிடித்துள்ளனர். "இது ஒரே நேரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மிகப்பெரிய நிலவுகள் தொகுப்பு" என்று ஹார்வர்டு-ஸ்மித்ஸோனியன் வானியல் மையத்தைச் சேர்ந்த மைக் அலெக்ஸாண்டர்சன் தெரிவிக்கிறார். இந்த நிலவுகளில் பல சிறியவை. வெறும் சில கிலோ மீற்றர் அளவிலேயே இருக்கும். (நம் பூமியின் நிலவு. 3.474 கிலோ மீற்றர் அகலமுடையது!

சனி கிரகத்தைச் சுற்றி வரும் இந்தப் பொருட்களை சர்வதேச வானியல் கழகம் **(International Astronomical Union)** அறிவியல்பூர்வமான தரவுகளின் அடிப்படையில் நிலவுகளாக உறுதி செய்துள்ளனர். இவை ஹவாயில் உள்ள கனடா-பிரான்ஸ்-ஹவாய் தொலைநோக்கி **(Canada France Hawaii Telescope)** மூலம் கண்டறியப்பட்டன. டாக்டர் ஆஷ்டன் மற்றும் அவரது குழுவினர் சனி கிரகத்தின் அருகில் உள்ள விண்வெளிப் பகுதியைத் தொடர்ச்சியாக கவனித்தது. அவர்களுக்குப் புதிதாக உள்ள நிலவுகளின் இயக்கங்களைக் கண்காணிக்க உதவியது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சனியின் 62 புதிய நிலவுகளைக் கண்டுபிடித்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றில் பலவும் ஒழுங்கற்ற நிலவுகளாகும். பெரும்பாலும் பிற முக்கிய நிலவுகளுக்கு எதிர்த்திசையில் பயணிப்பதாகவும் இருக்கின்றன. தொலைநோக்கியில் இவை வெறும் மங்கலான ஒளிப்புள்ளிகளாகவே தெரிகின்றன. இவற்றைக் கண்டறிந்து. ஆய்வுக்கட்டுரையை எழுதிய தைவானின் **Academia Sinica Institute of Astronomy and Astrophysics** இல் பணிபுரியும் எட்வர்ட் ஆஷ்டன். இந்த நிலவுகளுக்குப் பெயர்கள் சூட்டும் உரிமையைப் பெற்றுள்ளார். கனடாவைச் சேர்ந்தவரான ஆஷ்டன். தங்கள் நாட்டின் பூர்வகுடி மக்களிடம் பெயர்ப் பரிந்துரைகளைக் கேட்டுள்ளார். இதுதவிர பொதுமக்களிடையே போட்டியும் நடத்திப் பெயர்களைத் தேர்வு செய்கிறார். உங்களுக்கு ஆர்வம் இருந்தால் இந்தப் போட்டியில் பங்கேற்று. நிலாவுக்குப் பெயர் சூட்டும் பெருமையைப் பெறலாம்.

சனிக் கிரகத்தின் சுற்றுவட்டப் பாதையில் இத்தனை நிலவுகள் இருப்பது விண்வெளியில் பல பேரழிவுகள் நிகழ்ந்திருக்கும் என்பதற்கான சான்று. இந்த ஒழுங்கற்ற நிலவுகள் ஒரு காலத்தில் சனி இழுத்துப் பிடித்து வைத்திருந்த பிசிர்களாக இருக்கலாம் என்று டாக்டர் ஆஷ்டன் குழுவினர் நம்புகின்றனர். சில நிலவுகள் சூரியக் குடும்பத்தின் பிறபகுதிகளில் ஏற்பட்ட மோதல்களால் பிளவுபட்ட பெரிய பாகங்களாக இருக்கலாம் என்றும் கருதுகின்றனர். விண்வெளியை உற்றுப் பார்த்தபடி இருந்தால் இப்படி நிறைய ஆச்சரியங்களை உணர முடிகிறது.

# தெளிவே என் சிந்தனையுள்...

5

மன ஒருமைப்பாடு என்பது மனிதர்களுக்கு மிக முக்கியமானது. தற்போதைய மனித வாழ்க்கை என்பது இயந்திரமயமாகிவிட்டது.

இதில் ஓடும் மனிதர்களுக்கு மன அழுத்தம் வரவே செய்யும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையேயான வாழ்க்கை முறைமை வித்தியாசமானது.

தமிழர்களிடம் இயல்பாயே, சொத்துச் சேர்க்கும், பணம் சேமிக்கும் பழக்கம் அதிகமுண்டு. ஆனால் சிங்களவர்களில் அனேகரிடம் அத்தன்மை குறைவாகவே காணப்படுகின்றது.

**இதற்கு நல்ல உதாரணமொன்று:** போர் நிறைவுற்று 16 ஆண்டுகள் கடந்து விட்டன. இன்றுவரை தெற்கில் இருந்து வரும் சுற்றுலா பேருந்துகள் வந்து கொண்டுதான் இருக்கின்றன.

அவர்கள் ஒரு குழுவாக, முதியோர், பெண்கள் அமைப்புக்களாக வடக்கிற்கு சுற்றுலா வருகின்றனர்.

இதுவே வடக்கில் இருந்து ஒரு பேருந்து தெற்கிற்கு சுற்றுலா சென்றிருக்குமா என்று கேட்டால் அதற்கான பதில் எவ்வாறு இருக்கும்?

தமிழ் மக்களைப் பொறுத்தவரை வீட்டை விட்டு, வீட்டிலுள்ள பெறுமதியான பொருட்களை விட்டு, தோட்டம், துரவை விட்டு, ஆடு, மாடு, நாய்களை விட்டு வெளியே செல்ல முடியாத குறுகிய மன நிலை இருக்கவே செய்கிறது.

**அன்பானவர்களே!** வடக்கில் நடைபெறும் தற்கொலைகளைப் போல தெற்கில் நடக்கிறதா என்ற தேடலை ஆரம்பியுங்கள். தெற்கில் அவ்வாறு நடப்பது அரிது.

அவர்களிடம் சுற்றுலாவும் மனநிலை, அதனூடாக மனதை இலகுபடுத்தி: மன இறுக்கங்களிலிருந்து இலகுவில் விடுபட்டுக் கொள்கிறார்கள்.

ஆனால் நாமோ: பணம், பொருள் என்று மயங்கி எமக்கு வரும் சிறு பிரச்சினைகளைக்கூட எதிர கொள்ள முடியாமல் தவறான முடிவுகளை எடுத்துக் கொள்கிறோம்.



குர்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா

# ரீவி பக்கம்

## சுந்தர்.சி-குஷ்புவின் மகள் அவந்திகாவின் சினிமா என்ட்ரி

அம்மாவின் அழகு, அப்பாவின் கம்பீரத்தோடு மெதுவாக வந்து அமர்கிறார் அவந்திகா சுந்தர். "வருஷம் 16" குஷ்புவை அப்படியே ஞாபகப்படுத்துகிறார். இந்த வாரத்தின் ஹாட் நியூஸ் சுந்தர்.சி - குஷ்புவின் மகள் அவந்திகாவின் சினிமா என்ட்ரி. ''நான் சினிமாவில் நடிக்கப்போகிறேன் என்று அம்மாவிடம் முதன்முதலில் சொன்னதும் அம்மா அதற்கு சப்போர்ட் செய்தார். ஆனால் "இங்கே சினிமாவில் இருக்கறது சாதாரண விடயமில்லை. கொஞ்சம் கடினமான இடம், பார்த்துக்கொள் என்று சொன்னார்.

சினிமாவை மிகவும் சீரியஸாக எடுத்துக் கொண்டு அதற்குள் வருகிறேன். என்னை அம்மாவோடு நிச்சயம் ஒப்பிடுவார்கள். அம்மா மாதிரியெல்லாம் உழைப்பு, அந்தத் தீவிரம், நடிப்பை மிகவும் அக்கறையாக எடுத்துக்கொள்வது எல்லாம் எனக்கு அமைய வேண்டும். அதையெலலாம் பெரிய விடயமாக நினைக்கிறேன்.

அம்மாவைப் போலவே ஆவது சிரமம் என்றாலும், அதற்கான பயிற்சியை எடுக்க வேண்டும்.

ஆனாலும் இதையெல்லாம் எதிர்கொள்ளத் தான் வேண்டும். வாரிசுகள் எல்லோருக்கும் அப்படி ஒரு சூழல் வந்துதான் சேரும். இயல்பாகவே அம்மாவுடைய ஜீன் என்னிடம் இருக்கிறது. அப்பா படங்களுக்கு உழைப்பதைப் பார்த்தது, அவரோடு கூடவே இருந்தது எல்லாம் சேர்ந்து இயல்பாகி சினிமாவில் என்னால் ஒரு இடத்திற்கு வர முடியும் என்று நம்புறேன்.



சினிமாவுக்கு வருவது என் சொந்த முடிவு அப்பாவோ அம்மாவோ எந்த பிரஷரும் கொடுத்ததே இல்லை. முழுச் சுதந்திரம் கொடுத்து வளர்த்திருக்கிறார்கள். எங்களுடைய எண்ணங்களுக்கு ஒரு நாளும் குறுக்கே இருந்ததேயில்லை.

என் சினிமா என்ட்ரிக்கான வேலைகள் நடந்து கொண்டே இருக்கிறது. நல்ல கதைகள் கேட்டுக் கொண்டு இருக்கிறேன். இன்னும் எந்த புராஜெக்ட்டில் அறிமுகம் ஆகப்போறேன் என்று முடிவு செய்யவில்லை. நன்றாக யோசித்து அடுத்தடுத்து நகர்ந்து கொண்டே இருக்கிறேன். மக்களுக்கு மிகவும் பிடித்த ஒரு கதாநாயகியாக இருப்பேன் என்று நம்புகின்றேன். இதற்கான அறிவிப்பு இந்த வருடமே கூட நடக்கலாம். இனி முழுக்க முழுக்க சினிமா தான் என்னுடைய ஏரியா என தீர்மானமாகப் பேசுகிறார் அவந்திகா.



கடந்த வாரம் தனது பிறந்த நாளைக் கொண்டாடிய மகாலட்சுமி அன்று தரமான ஒரு சம்பவம் செய்துள்ளார். அதாவது தன் உடலுறுப்புகளைத் தானம் செய்யும் முடிவை எடுத்து அதற்கான நடைமுறைகளை முடித்துள்ளார். "பிறந்த நாள் அதுவுமா இப்படியொரு முடிவா என்று சிலர் நினைக்கக்கூடும், நல்ல விடயத்தைத் தள்ளிப்போடக் கூடாது என்று சொல்லுவார்கள் இல்லையா? அது தான் அப்படியொரு சிந்தனை வர, பிறந்த நாள் அன்று செய்தால் இன்னும் நல்லதுதானே என்று உடனே முடித்துவிட்டேன்'' என்கிறார்.



சின்னத்திரையில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக நடித்து வரும் அருண் குமார் முதன் முதலாக சினிமாவுக்கு வருகிறார். அதுவும் அறிமுகப் படமே நடிகர் விஜய் படம். "ஜனநாயகன்" படத்தில் நடித்திருக்கும் அருண்குமார், இந்தப் படத்தில் கமிட் ஆகியிருந்ததாலேயே பொது விடயங்களில் கருத்து சொல்லி வீடியோ வெளியிடுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தாராம்.



தன்னுடைய யூடியூப் சேனலில் சமையல் டிப்ஸ் தரும் வீடியோக்களைப் பதிவிட்டு வந்த நடிகை **"ஊர்வம்பு"** லக்ஷ்மி சமீபமாக சமையல் தொடர்பான நிகழ்ச்சிகளில் நடுவராகக் கலந்துகொள்ளத் தொடங்கிவிட்டார். சமீபத்தில் மிக்ஸி தயாரிப்பு நிறுவனம் ஒன்று தனது புதிய மாடலை அறிவிக்கும் விழாவுக்கு விருந்தினராக இவரை அழைத்து கௌரவப்படுத்தியிருந்தது.



சீதா ராமம், "லக்கி பாஸ்கர்" படங்களின் வெற்றிக்குப் பிறகு, பேன் இந்தியா படங்களில் தீவிர ஆர்வம்காட்டும் துல்கர் சல்மான், நேரடி தமிழ்ப் படங்களில் நடிக்க ஆர்வம் காட்டுவதில்லையாம். மலையாளத்தில் வாய்ப்புகள் வந்தாலும் தேர்ந்தெடுத்துத்தான் நடிக்கிறார். அதேசமயம், ஹிந்தியில் நடிக்கத் துடிப்பாக இருக்கிறார்.

அதனால் பெரும்பாலான நாள்கள் மும்பையிலேயே கழிக்கிறார்.

இதற்கிடையே, உடல் நலம் பாதிக்கப் பட்டிருக்கும் அப்பாவையும் அக்கறையாகக் கவனித்துக்கொள்ளத் தவறவில்லை துல்கர்.



### ஜான்வி கபூரைத்

தமிழில் அறிமுகம் செய்யும் வகையில் கவின், சிம்பு படங்களுக்காக ஒப்பந்தம் செய்ய முயற்சி செய்துள்ளனர். ஆனால், அவர் கேட்கும் சம்பளம், ஹிந்திப் படங்களுக்கு ஏற்ற மாதிரி பெரிய அளவில் இருப்பதால், வெறுங்கையோடு திரும்பிவிட்டார்களாம். இந் நிலையில், ஸ்ரீலீலா, ப்ரீத்தி முகுந்தன், மமிதா பைஜூ ஆகியோருக்குத் தமிழில் வாய்ப்புகள் கூடிக் கொண்டே போகின்றன. ஆளாளுக்கு இரண்டு படங்களுக்கு மேல் கைவசம் வைத்திருக்கிறார்கள்.



**மீண்டும்** ஒரு ரவுண்டு வர ரெடியாகி விட்டார் வடிவேலு. சுந்தர்.சி உடன் நடித்திருக்கும் **"கேங்கர்ஸ்"** இம்மாதம் வெளியாகிறது. இதனையடுத்து ஆர்.பி.சௌத்ரியின் தயாரிப்பில் பகத் பாசிலுடன் நடித்திருக்கும் "மாரீசன்" ஜூலையில் வெளியாகிறது. தவிர, பிரபுதேவாவுடன் ஒரு படத்தில் இணைகிறார். பிரபுதேவா நடிப்பில் விரைவில் வெளியாகவிருக்கும் "மைக்கேல் முசாசி" என்கிற படத்தை இயக்கிய சாம் ரோட்ரிகஸ்தான், பிரபுதேவா - வடிவேலு கூட்டணியையும் இயக்கவிருக்கிறார்.



இசையமைப்பாளராக வேக வேகமாக வளர்ந்து வரும் சாய் அபயங்கர், சிம்புவை அடிக்கடி சந்திக்கிறார். அவரின் ஒலிப்பதிவுக் கூடத்துக்கு அழைத்துப் போய்க் காண்பித்திருக்கிறார். சாய், பாடல் கம்போஸிங் செய்யும் ஸ்டைலைப் பார்த்து, சிம்பு ஆச்சரியப்பட்டுவிட்டாராம். சிம்புவை வைத்து அஸ்வத் மாரிமுத்து இயக்கும் படத்துக்கு சாய்தான் இசை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூரோ மோட்டோர்ஸ் இலங்கைக்கு அறிமுகப்படுத்தும் உலகப் புகழ்பெற்ற JETOUR வாகனங்கள்

விளம்பர விபரணம்




உலகின் முன்னணி தரங்களை உடைய வாகனங்களை இறக்குமதி செய்வதில் என்றும் நற்பெயரைப் பெற்ற நிறுவனமான யூரோ மோட்டார்ஸ் (பிரைவேட்) லிமிடெட், சர்வதேச அளவில் மிகவும் புகழ்பெற்ற வாகனமான "JETOUR" வாகனங்களுக்கான பிரத்யேக விநியோகஸ்தர் பதவியைப் பெற்றுள்ளது. இது தொடர்பாக யூரோ மோட்டார்ஸ் மற்றும் JETOUR குளோபல் இடையேயான விநியோகஸ்தர் பதவி ஒப்பந்தம் சமீபத்தில் கொழும்பில் கையொப்பமிடப்பட்டது. இதில் துணைத்தலைவர் கெவின் சூ, ஆசிய பசுபிக் பிராந்தியத் தலைவர் மற்றும் மேலாளர் அலெக்சாண்டர் ஷ மற்றும் JETOUR குளோபல் நிர்வாக இயக்குநர் ஜமீர் இம்தியாஸ் ஆகியோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விற்பனை மேம்பாட்டு மேலாளர் (ஆசியா பசுபிக்) லூயிஸ், தலைமை இயக்க அதிகாரி ரவீந்திர சேனாரத்ன, இயக்குநர் முகமது ஃபியாஸ் மற்றும் யூரோ மோட்டார்ஸை பிரதிநிதித்துவப்படுத்தும் பொது மேலாளர் (விற்பனை மற்றும் வணிக ஊக்குவிப்பு) கயந்த திசாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக உயர்தர வாகனங்களை இறக்குமதி செய்து விநியோகிப்பதிலும், விற்பனைக்குப் பிந்தைய சேவைகளுக்கும் பரவலாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான யூரோ மோட்டார்ஸ், இந்த ஆண்டு மே மாதம் 07 இருக்கைகள் கொண்ட சொகுசு SUV வாகனமான JETOUR X70 PLUS மற்றும் 05 இருக்கைகள் கொண்ட சொகுசு SUV வாகனமான JETOUR DASHING ஆகியவற்றை அறிமுகப்படுத்தி இலங்கை வாகன ஆர்வலர்களுக்கு ஒரு தனித்துவமான அனுபவத்தை வழங்கத் தயாராக உள்ளது.

இந்த வாகனம், சௌகரியம், தொழில்நுட்பம், நேர்த்தி, பாதுகாப்பு அத்தோடு நீடித்து உழைக்கும் தன்மை என எதுவாக இருந்தாலும் - உலகின் சிறந்த SUV கள் அனைத்தையும் கொண்டுள்ளன. JETOUR வாகனங்கள் 1498 CC Turbo intercooler Engine, 06 forward automatic gears, panoramic glass roof, air bags, auto door lock போன்றவற்றுடன் கூடியது. இது ஒரு சுமூகமான பயணத்தை எளிதாக்குகிறது.

மேலும், JETOUR SUV வாகனங்கள் கவர்ச்சியான மற்றும் பல பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டுள்ளன. அவற்றில் Blind spot detection, Lane assist, Rear cross traffic alert, Reversing Camera, 360 degree HD view camera, Cruise control, Power tailgate, Paddle shift போன்றவற்றோடு இரண்டாவது வரிசை இருக்கை சரிசெய்யக்கூடிய, மூன்றாவது வரிசை இருக்கை மடிக்கக்கூடிய மற்றும் நீக்கக்கூடியதுமாக அமைகின்றது. முன் மற்றும் இரண்டாவது Armrest, Colourful central display, Intelligent voice command, 12-volt power outlets, Armrest box cooling and heating option, ESP, ABS, EBD, TCS, EBA, RMI, HHC>,HDC, CDP, HDZ மற்றும் பல.

வாடிக்கையாளர் நம்பிக்கையை வளர்ப்பதில் கவனம் செலுத்தி ஏராளமான சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள யூரோ மோட்டார்ஸ், கொழும்பில் முழுமையாக பொருத்தப்பட்ட விற்பனைக்குப் பிந்தைய சேவை மையத்தைத் திறக்க ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது. இரண்டாவது கட்டமாக, கண்டியிலும் மற்றொரு சேவை மையம் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது.

JETOUR வாகனங்களுக்கு 04 ஆண்டுகள் மற்றும் 100,000 கிலோமீற்றர் தூரத்திற்கு உத்தரவாதத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும், இலவச பதிவுடன் 10 வழக்கமான சேவைகளை தொழிலாளர் இல்லாத அடிப்படையில் அறிமுகப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. JETOUR வாகனங்களுக்கான கூடுதல் விவரங்களைப் பெற அல்லது ஓடர்களை வழங்க விரும்புவோர் நிறுவனத்தின் ஹாட்லைன் எண் (011-450 4504) மூலம் தொடர்பு கொள்ளலாம். அல்லது 076 619 9399 மூலம் வாட்ஸ்அப் செய்தியை அனுப்பலாம். முன்பதிவு முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இருக்கும்.

# உலகின் மிக உயரமான பாலம் சீனாவில்



(பீஜிங்)


சீனாவில் ஹியாஜியோங் கிராண்ட் கேன்யன் பாலம் வருகிற ஜூன் மாதம் திறக்கப்பட உள்ளது. இது ஒரு பெரிய பள்ளத்தாக்கின் குறுக்கே இரண்டு மைல்கள் நீளமுள்ள கட்டமைப்பு. 216 மில்லியன் பவுண்டுகள் செலவில் இந்த பாலம் அமைக்கப்படுகிறது.


இந்த பாலத்தால் பெரிய பள்ளத்தாக்கை கடக்கும் பயண நேரம் ஒரு மணி நேரத்திலிருந்து ஒரு நிமிடமாகக் குறையும். ஈபிள் கோபுரத்தை விட 200 மீற்றருக்கு மேல் உயரம் கொண்ட இந்தப் பாலம் ஒரு குறிப்பிடத்தக்க கட்டடக்கலை சாதனையாகும்.

சீனாவின் கிராமப்புறப் பகுதியில் முக்கியமான போக்குவரத்து இணைப்புகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், இந்தப் புதிய பாலம் ஒரு முக்கிய சுற்றுலாத் தளமாகவும் இருக்கும்.

2016 ஆம் ஆண்டில், சீனாவின் மிக உயரமான பாலம் பெய்பன்ஜியாங்கில் கட்டப்பட்டது. இது வியக்கத்தக்க வகையில் 1,854 அடி உயரத்தில் கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

445

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# நீரிழிவு நோயாளர்களுக்கான ஆரோக்கியமான உணவுவகைகள்

நீரிழிவு நிலை உள்ளவர்கள் உண்ணக்கூடிய ஆரோக்கியமான உணவு வகைகள் உண்மையிலே அனைவருக்குமே பொருத்தமான ஒரு ஆரோக்கிய உணவு முறையாக அமைந்திருக்கிறது. இந்த உணவு வகைகளை சுவை நிறைந்ததாக சமையல் செய்து உண்பது மனதுக்கும் உடலுக்கும் புத்தூக்கத்தைக்கொடுத்து மனிதனின் ஆரோக்கியத்தை வளர்க்க உறுதுணையாக அமையும்.

முட்டை,பால்,கோழி இறைச்சி, மீன், இறால், தயிர், மோர் போன்றவை அதிக புரதத்தையும், விற்றமின்கள், கனியுப்புக்களையும் கொண்டவை. இவற்றை உங்களுக்குப் பிடித்த சுவையான வடிவத்தில் தயார் செய்து உண்ணமுடியும்.

சமையலின் பொழுது வாசனைத்திரவியங்கள், போதியளவு உறைப்பு, புளி, மஞ்சள், இஞ்சி, சீரகவகைகள், வெந்தயம், மல்லி போன்றவற்றை வேண்டிய அளவில் சேர்த்துக் கொள்ள முடியும். இவை உடல் நலத்திற்கு நன்மை பயப்பவையாக அமைவதுடன் உணவின் சுவையையும் அதிகரிக்க உதவும்.

மரக்கறி வகைகளை தெரிவு செய்யும் பொழுது வெவ்வேறு வர்ணங்களில் காணப்படும் பலவகை மரக்கறி வகைகளை மாறி மாறி தெரிவு செய்ய வேண்டும். அப்பொழுதுதான் எல்லா வகையான ஊட்டச்சத்துக்களும் எமக்கு கிடைக்கும். பூசணி, கரட், பீற்றூட், முள்ளங்கி உட்பட அனைத்து வகையான மரக்கறி வகைகளையும் பயன்படுத்த முடியும். நீரிழிவு நிலை உள்ளவர்கள் பழவகைகளை உண்ண முடியாது என்ற ஒரு தப்பபிப்பிராயம் நிலவுகிறது. இது முற்றிலும் தவறானது.

அன்னாசி, விளாம்பழம், பப்பாசிப்பழம், கொய்யாப்பழம், ஜம்புப்பழம், வாழைப்பழம், வத்தகப்பழம், தோடம்பழம், மாதுளம்பழம், நாவற்பழம் போன்ற பழவகைகள் சுவையும் ஊட்டச்சத்துக்களும் நிறைந்தவை. இவற்றை போதிய அளவில் உண்ண முடியும். பழங்கள் உண்ணும் பொழுது குருதிக்குளுக்கோசின் அளவு சற்று அதிகரித்தாலும் கூட இவற்றை உண்ணுவதால் ஏற்படும் அனுகூலங்கள் பலமடங்கு அதிகமாகும்.

பழச்சாறுகளில் வெல்லத்தின் செறிவு அதிகமாகும். நார்த்தன்மை குறைவாகவும் இருப்பதுடன் பசியை கட்டுப்படுத்தும் வீதமும் குறைவாக இருக்கிறது. எனவே பழங்களை பழச்சாறாக மாற்றி குடிப்பதிலும் பார்க்க பழங்களாக உண்பது சிறந்ததாகும்.



கச்சான், கடலை, மரமுந்திரிகை (கயூ), பொட்டுக்கடலை போன்றவை உடல் ஆரோக்கியத்தை வளர்க்க உதவும். எனவே இவற்றை இடை நேரத்தில் தேநீருடன் உண்ண முடியும். புரதச்சத்து அதிகமுள்ள பயறு, உழுந்து, சோயா, கௌப்பி, பருப்பு வகைகள் போன்றவை சுவைபட போதிய அளவில் சமைத்து உண்ண முடியும்.

மாப்பொருள் செறிவு அதிகமுள்ள அரிசி,கோதுமை, ஆட்டாமா, குரக்கன் போன்றவற்றைப் பயன்படுத்தி செய்யும் உணவு வகைகளை குறைத்துக்கொள்வது நல்லது. காரணம் இவை சமிபாடு அடையும் பொழுது அதிகளவு குளுக்கோஸ் உண்டாகின்றது.

ஒப்பீட்டளவில் தீட்டாத அரிசிமா, குறைவாக தீட்டப்பட்ட குத்தரிசி, உழுத்தம்மா, பயற்றம்மா போன்றவற்றில் செய்யப்படும் உணவு வகைகள், வெள்ளைநிற அரிசி வகைகள், வெள்ளை நிற மாவகைகளில் செய்யப்படும் உணவுகளிலும் பார்க்க சிறந்தவையாகும். மாப்பொருள் அதிகமுள்ள உணவு வகைகளை உண்ணும் பொழுது உணவுக்கோப்பையில் அரைப்பங்கு இலை வகைகள், மரக்கறி வகைகளால் நிறைந்திருப்பது அவசியமாகும்.

உணவிலே சீனி, சக்கரை, பனங்கட்டி, குளுக்கோசு போன்றவற்றை தவிர்த்து அவற்றிற்குப் பதிலாக தேவை ஏற்படின் இனிப்புச்சுவையுள்ள இனிப்பூட்டிகளைப் பயன்படுத்துவது நல்லது. இந்த இனிப்புச்சுவையுடைய இனிப்பூட்டிகள் உடல் நிறையையோ அல்லது குருதிகுளுக்கோசின் அளவையோ அதிகரிக்கமாட்டாது.

எண்ணெய், பட்டர்,கொழுப்பு என்பன அதிகமுள்ள பொரித்த உணவுவகைகளுக்குப் பதிலாக "பக்" செய்யப்பட்ட உணவு வகைகளை தெரிவு செய்வது நல்லது.

உப்பை முற்றாக தவிர்த்து விட வேண்டும் என்ற அவசியம் இல்லை. அளவான உப்பு சேர்த்து சுவையாக சமையல் செய்ய முடியும். உப்பு அதிகம் சேர்க்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவுவகைகளை தவிர்த்து விடுவது நன்மை பயக்கும். அதிகளவு பழவகைகளையும், மரக்கறிவகைகளையும் உண்பது எம்மை மாரடைப்பு, உயர்குருதி அமுக்கம், பாரிசவாதம், நிறை அதிகரிப்பு, கொலஸ்ரோல் அதிகரிப்பு போன்ற நோய் நிலைகளிலிருந்து பாதுகாக்கும். வீட்டின் அன்றாட பாவனைக்கு சிறிய உணவுக் கோப்பைகளையும், சிறிய தேநீர் பேணிகளையும் பயன்படுத்துவோம். இது நாம் மேலதிகமாக உண்பதை தவிர்க்க உதவும். சோறு, பிட்டு போன்றவற்றை பரிமாறுவதற்கு சிறிய கரண்டிகளையும் மரக்கறி வகைகளை பரிமாறுவதற்கு பெரிய கரண்டிகளையும் பயன்படுத்துவோம். உணவை ஆறுதலாக சுவைத்து ரசித்து உண்ணும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஒரே வகையான உணவில் அனைத்துவகையான ஊட்டச்சத்துக்களும் அடங்கி இருக்காது. எனவே நாம் உண்ணும் உணவின் வகைகளை மாற்றிக் கொள்வது பயன்தரும்.

Dr. சி. சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்,
யாழ். போதனா
வைத்தியசாலை,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்டல் தாவரங்கள் மீள் நடுகைத் திட்டம்




(மன்னார்)

உலகளாவிய சூழலியல் வசதி எனும் செயற்றிட்டத்தின் கீழ், கடலோர கண்டல் தாவரங்களின் வளர்ச்சி ஊடாக சூழலைப் பாதுகாக்கும் முகமாக கண்டல் தாவரங்கள் நடும் செயற்பாடு கிளிநொச்சி பூநகரி மற்றும் மன்னார் கீலிக் கரையான்பிட்டி நிலப்பகுதிகளில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் UNDP நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர் Ministry of Crab நிறுவனத்தின் உத்தியோகத்தர் மற்றும் UNDP இன் மன்னார் மாவட்ட கள இணைப்பாளர், அறிவு முகாமைத்துவம் பகுதி திட்ட இயக்குநர், உட்பட We Can அமைப்பின் பிரதிநிதிகள், கீலியன் குடியிருப்பு மற்றும் வேட்டையான் முறிப்பு மீனவ அமைப்பு பிரதிநிதிகள், வன வளதிணைகள் உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

குறித்த செயற்றிட்டத்தின் ஊடாக மன்னார் மாவட்ட கரையோரப் பகுதிகளில் சுமார் 7500 கண்டல் தாவரங்கள் நடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-285)





ஈவினை மதுரையம்பதி ஸ்ரீ மீனாட்சியம்பாள் ஆலய தீர்த்தோற்சவம் நேற்று முன்தினம் நிலாவரை புனித தீர்த்தக்கரையில் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

# வடமாகாண சித்திரை புத்தாண்டுக் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் ஏற்பாட்டில், விளையாட்டுத் திணைக்களம், தொழிற்துறைத் திணைக்களம், வலிகாமம் தெற்கு பிரதேச சபை மற்றும் சுற்றுலாப் பணியகம் இணைந்து நடத்தும் வடக்கு மாகாண சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை மருதனார்மடம் யா/இராமநாதன் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் அ.பத்திநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளான கிளித்தட்டு, கயிறிழுத்தல், யானைக்கு கண் வைத்தல், தேசிக்காய் கரண்டி ஓட்டம், போர்த்தேங்காய் அடித்தல், வழுக்கு மரம் ஏறுதல், முட்டி உடைத்தல், தலையணைச் சண்டை, பலூன் ஊதி உடைத்தல், சாக்கோட்டம், பலம் பார்த்தல் போன்ற விளையாட்டுக்கள், தமிழ் சிங்கள பாரம்பரிய கலை நிகழ்வுகள், பாரம்பரிய கலைகளின் சங்கமம் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் விநோத உடை நிகழ்வு, இன்னிசைக் கச்சேரி பண்பாட்டுப் பாரம்பரிய உற்பத்தி பொருட்கள் மற்றும் பாரம் பரிய உணவுக் காட்சிக் கூடங்கள் என்பன இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 14.03.2025 வெள்ளிக்கிழமை
அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

அமரர்.
**இராசையா தவமணி**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். தொடர்ந்து மதியம் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உள்ளத்தில் உறைந்திருக்கும்
உங்கள் தெய்வீகக் குரல் ஓசை
இல்லத்தில் குலதெய்வமாய் குடியிருக்கும் அம்மா...
உங்கள் வழித்தடத்தில் வாழ்ந்திடுவோம்
சாந்தியாய் உறங்கிடம்மா

இலந்தைக்காடு,
வல்வெட்டித்துறை.

(1012)

தகவல்:
குடும்பத்தினர்

# இராசிபலன்

13.04.2025
பங்குனி 30, ஞாயிற்றுக்கிழமை
பிரதமை முழுவதும்
சித்திரை முன்னிரவு 8.53 மணிவரை

சுபநேரம் 9.06-10.36 மணிவரை
இராகுகாலம் 4.36-6.06 மணிவரை
குருத்தோலை ஞாயிறு

சந்திராஷ்டமம்-
பூரட்டாதி, உத்திரட்டாதி

வளவன்

**மேஷம்** மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**ரிஷபம்** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், நன்மைகள் நாடி வரும் நாள், போசன சுகமுண்டு.

**கடகம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், சுய முயற்சிகள் மூலம் சுகம் காணும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**துலாம்** தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, கற்பனை மிகுதியான நாள், பயணங்களால் பலனுண்டு, திட்டமிடப்படாத காரியமொன்று நடைபெறலாம்.

**விருச்சிகம்** பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், தேவையற்ற மனச்சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, அலைச்சல்கள் சற்று கூடும்.

**தனுசு** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, நினைத்தது நிறைவேறி நிம்மதி கிடைக்கும் நாள்.

**மகரம்** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணிய காரியம் எளிதில் நிறைவேறும் நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், உடல் நலன் சீராகும்.

**மீனம்** திடீர்ச் செலவுகளால் சேமிப்பில் சிறிது கரையலாம், பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை, விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

எறும்பு ஊர்ந்து [illegible] மெல்ல மெல்ல வளர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் அகழ்விற்கு நிரந்தரத் தீர்வு வேண்டும்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்விற்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என கிராம மக்கள் அரச திணைக் களங்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சட்டவிரோத மணற் கொள்ளையர்கள் உசன்-விடத்தற்பளை-கெற்பேலி வீதிகள் ஊடாக மணலைக் கொண்டு செல்வதால் வீதிகள் கடுமையாக சேதமடைந்துள்ளன.

எனவே கெற்பேலி பகுதியில் பொலிஸ் காவலரண் அல்லது விசேட அதிரடிப் படையினரை கடமையில் அமர்த்தி எமது வளத்தைப் பாதுகாக்க வேண்டும்.

அத்துடன் சரசாலை -கோணா வளைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் சுண்ணக்கற்களை அகழ்வதால் சூழல் பாதிப்படைவதாக அப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

எனவே குறித்த பகுதிகளில் இடம் பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்விற்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டுமென கிராம மக்கள் உரிய தரப்புக்களிடம் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (6-8-30)

# யோகா பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக் கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண்வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாக உள்ளது.

சக்கரை நோய் கட்டுப்பட, பெண்களின் கர்ப்பப்பை தொடர்பான பிரச்சினை தீர ஆஸ்துமா சளி தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைராய்டு பிரச்சினை தீர எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும். பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் சு. நித்தியஸ்ரீ வழங்குவார்கள்.

# கே.சீ.சீ.சீ வெற்றிக்கிண்ண சுற்றுப்போட்டிகள் நேற்று ஆரம்பமானது

கே.சீ.சீ.சீ விளையாட்டுக்கழகம் 34ஆவது வருடமாக நடத்தும் கே.சீ.சீ.சீ வெற்றிக்கிண்ணம், நேற்று சனிக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

இவ் வெற்றிக்கிண்ணத் தொடர் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மேல் பிரிவில் சென்றலைட்ஸ், றெயின்போ, கிருஸ் கொப்பர்ஸ், ஜொலிஸ்ரார், ஹாட்லியையிற்ஸ், விக்ரோறியன்ஸ், A,B கோவளம், யாழ்.பல்கலைக் கழகம், ஸ்ரான்லி, ஓல்ட் கோல்ஸ், கே.சீ.சீ.சீ அணிகளும், கீழ்ப் பிரிவில் மானிப்பாய் பரிஸ், நியூஸ்ரார், யூனியன்ஸ், பற்றீசியன்ஸ், T.YMHA, டிறைற்றேன், றிபேக்ஸ்ரார், ஸ்கந்தா ஸ்ரார், T.C.C, விக்டோறி, அரியாலை சென்றல், யாழ்.ஜொனியன்ஸ் என 24 கழக அணிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள போட்டியில் A,B மற்றும் கோவளம் அணிகளும் அன்று பிற்பகல் 1 மணிக்கு அதே மைதானத்தில் இடம் பெறவுள்ள பிறிதொரு போட்டியில் ஸ்ரான்லி, ஓல்ட்கோல்ஸ் அணிகளும் மோதவுள்ளன. (6-8)


## விசுவாவசு வருஷம்-2025

உலகப் புகழ்பெற்ற

ARP ஆதி சிவன் ராசி பலன்கள்



(மிகத் துல்லியமான பலன்கள் பார்க்க, ஜாதகம் எழுத தொடர்பு கொள்ளுங்கள்.)

ஆதிசிவன் கோயில்
தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.
074 369 2974, 070 369 2974,
075 369 2974


நல்லூர் முருகன்
கோயில் முன்பாக
077 614 0849
077 213 3694

அனைவருக்கும் (2025) புத்தாண்டு வாழ்த்துக்கள்

விசுவாவசு வருஷம் 13.04.2025 இரவு 2.29 இற்கு தேய்பிறை பிரதமை திதியும் சுவாதி நட்சத்திரமும் கூடிய சுபவேளையில் மகர லக்கினத்தில் பிறக்கின்றது.
ஞாயிறு இரவு 10.29-திங்கள் காலை 6.29 வரை புண்ணிய காலமாகும். மருத்துநீர் வைத்து நீராடி ஆதிசிவன் மற்றும் குலதெய்வத்தை, இஷ்டதெய்வம், குரு, பெற்றோரை வணங்கி ஆசிபெற்று 14.04.2025 திங்கள் காலை மங்களப் பொருட்களைத் தரிசித்து சிவப்பு, வெள்ளை ஆடையணிந்து உறவினர்களுடன் கலந்து புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாடுவீர்களாக!



Ave Maria



INDO-SRILANKAN SEA CRUISE From KKS JAFFNA

Velankanni

වේලාන්කන්නි

வேளாங்கன்னி

LKR.55,000/-

03 Nights & 04 Days

- Per Person/ 3 star AC Twin sharing with breakfast
- Harbour to Hotel and return A/C transport included
- No other food or Drinks Included
- Departures 6 Days a Week
- Single Person to Groups



Ashokavatika Holidays

Since 1998

+94 777 360 353
+94 113 499 995

No.51, Amman Road,
Nallur, Jaffna.


Need Islandwide
Full/ Part time Agents.

(C-2675)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருத்ர தாண்டவம் ஆடிய அபிஷேக் சர்மா

## கடின இலக்கை அசால்ட்டாக வென்றது சன்ரைசர்ஸ்



அபிஷேக் சர்மாவின் அபார சதம் மூலம் இலக்கை இலகுவாக வென்றது சன்ரைசர்ஸ் ஐதராபாத் ஐ.பி.எல். 2025 தொடரின் 27-வது போட்டி ஐதராபாத்தில் நேற்று நடைபெற்றது. இதில் சன்ரைசர்ஸ் ஐதராபாத், பஞ்சாப் கிங்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. டாஸ் வென்ற பஞ்சாப் கிங்ஸ் அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பாடிய பஞ்சாப் கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 245 ஓட்டங்கள் குவித்துள்ளது.

பிரியான்ஷ் ஆர்யா 36 ஓட்டங்களும், பிரப்சிம்ரன் சிங் 42 ஓட்டங்களும் எடுத்தனர். கேப்டன் ஷ்ரேயஸ் அய்யர் ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடி அரை சதம் கடந்தார்.

ஷ்ரேயஸ் அய்யர் 36 பந்தில் 6 சிக்சர், 6 பவுண்டரி உட்பட 82 ஓட்டங்கள் குவித்தார். நேஹல் வதேரா 27 ஓட்டங்கள் எடுத்தார். கடைசி கட்டத்தில் ஸ்டோய்னிஸ் 11 பந்துகளில் 34 ஓட்டங்கள் எடுத்தார்.ஐதராபாத் அணியின் ஹர்ஷல்படேல் 4 விக்கெட்டும், இஷான் மலிங்கா 2 விக்கெட்டும் வீழ்த்தினார்.

இதையடுத்து, 246 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஐதராபாத் களமிறங்கியது. அபிஷேக் சர்மா, டிராவிஸ் ஹெட் முதல் பந்தில் இருந்து விளாசத் தொடங்கினர். கிடைத்த பந்துகளை சிக்சர், பவுண்டரிகளாக அடித்தனர்.

முதல் விக்கெட்டுக்கு 171 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் டிராவிஸ் ஹெட் 66 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதிரடியாக ஆடிய அபிஷேக் சர்மா சதமடித்து அசத்தினார். அபிஷேக் சர்மா 55 பந்தில் 10 சிக்சர், 14 பவுண்டரி உட்பட 141 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் ஐதராபாத் அணி 18.3 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 247 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. நடப்பு தொடரில் ஐதராபாத் அணி பெறும் 2வது வெற்றி இதுவாகும். பஞ்சாப் அணியின் 2வது தோல்வி இதுவாகும் .போட்டியின் ஆட்ட நாயகனாக அபிஷேக் சர்மா தெரிவானார். (ம-7)

# மரண அறிவித்தல்

பிறப்பு 20 - 08 - 1948



இறப்பு 12 - 04 - 2025

## அன்னராணி பஞ்சாட்சரம்

உடுப்பிட்டி மேற்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்னராணி பஞ்சாட்சரம் அவர்கள் நேற்று 12.04.2025 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருனாசலம் - அழகம்மா தம்பதியினரின் புதல்வியும் பஞ்சாட்சரத்தின் அன்பு மனைவியும் குகதாசன், குமுதினி, வசந்தன், வசந்தினி ஆகியோரின் அன்புத் தாயும் ராஜரத்தினம், வேலாயுதம், செந்திவேலாயுதம், தங்கராணி, கருணைவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சஞ்சயன், சட்ஸ்வின், கிருத்திகா, சாருகா, அவினாஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உருப்பிட்டி மேற்கு,
உடுப்பிட்டி.

(C-2697)

தகவல்:
குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரை குற்றம் கூறும் குணத்தில் இருந்து விடுபட்டு இருந்தால், அனைவரின் ஆசீர்வாதங்களைப் பெறுவோம். - அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## நோயாளர் நலன் பேணும் சங்கங்களை உருவாக்குங்கள்

பிரதேச வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யாமல், எமது மக்களுக்கான மருத்துவ சேவையை ஒருபோதும் தரமாக வழங்க முடியாதென்பது நிறுதிட்டமான உண்மை.

ஆம், ஒவ்வொரு பிரதேசத்துக்குமென அமையப்பெற்ற பிரதேச வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்படுவதுடன் அங்கு 24 மணிநேரமும் மருத்துவர்கள் பணியாற்ற வேண்டும்.

அவ்வாறானதொரு சூழ்நிலை ஏற்படும் போது, யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் செல்கின்ற நோயாளர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைவடையும்.

எனவே பிரதேச வைத்தியசாலைகளின் அபிவிருத்தி தொடர்பில் நாம் கூடிய கருசனை காட்ட வேண்டும்.

எனினும் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தால் பிரதேச வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதென்பது உடனடிச் சாத்தியமில்லை.

தவிர, எங்கள் யாழ்ப்பாண மண்ணில் இருக்கக்கூடிய கணிசமான திணைக்களங்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட சேவைகளை - பணிகளைச் செய்கின்றனவோ இல்லையோ, அவை பழிவாங்கல்களைச் செய்வதில் ஒருபோதும் பின்னிற்பதில்லை.

இதற்கு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் விதிவிலக்கல்ல.

எனவே உச்சமாகச் செயற்படாத திணைக்களங்கள் எங்கள் ஊழ்வினைப் பயன் என்று அவற்றை விட்டு விட்டு, மாற்றுவழிகளைத் தேடுவதில் தான் எமது மக்களுக்கான சேவை உன்னதமடையும்.

அதில் ஒன்றுதான் பிரதேச வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு நோயாளர் நலன்புரிச் சங்கங்களை உருவாக்குதல் அல்லது ஏலவே உள்ள நோயாளர் நலன்புரிச் சங்கங்களை இயங்குநிலைக்குக் கொண்டுவருகின்ற செயற்பாடாகும்.

ஆம், இப்போதெல்லாம் எங்கள் பாடசாலைகள், எங்கள் ஆலயங்கள் அடைந்துள்ள அபிவிருத்தி சாதாரணமானதல்ல.

ஆலடி வைரவருக்குப் பஞ்ச தள இராஜகோபுரம். மிகக்குறைந்த பிள்ளைகள் உள்ள பாடசாலைகளாயினும் அவற்றுக்கும் நுழைவாயில் வளைவு என எங்கும் கவின் நிலைப்பட்டுள்ளன.

இவ்வாறான ஓர் உயர்நிலைக்கு; அந்தந்த பாடசாலைகளில் கற்ற மாணவர்கள் வெளிநாடுகளில் இருப்பதும் தங்கள் குலதெய்வம் என்று போற்றவல்லவர்கள் வெளிநாடுகளில் வாழ்வதுமே காரணமாகும்.

ஆம், எங்கள் புலம்பெயர் உறவுகள் தங்களின் தாய் மண்ணுக்காக எத்துணை உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

ஆக, ஒவ்வொரு பிரதேச வைத்தியசாலைகளும் நோயாளர் நலன்புரிச் சங்கங்களை அமைத்து இயக்கினால், எங்கள் பிரதேச வைத்தியசாலைகளில் மருத்துவ உபகரணங்கள் மற்றும் இதர வளங்கள் அதிகரிக்கும்.

அதனூடு எங்கள் மக்கள் தரமான மருத்துவ சேவையைப் பெற முடியும். சிலவேளைகளில் மேல்மட்டம் இதையும் தடுக்கலாம். ஆனால் துணிச்சல்மிக்க வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிகள் மனம் வைத்தால், எங்கள் மண்ணில் இறப்புக்கான அழுகுரல்கள் நிச்சயம் குறைவடையும்.

### மோதல்களால் மக்கள் இனியும் பாதிக்கப்படக்கூடாது

# நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

(யாழ்ப்பாணம்)

நாட்டில் உருவாக்கப்படும் மோதல்களால் மக்கள் இனியும் பாதிக்கப்படக்கூடிய நிலை உருவாகக் கூடாது என்றும், நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என்றும், மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்தைப் போன்றே அரசாங்க சேவைப் பிரிவுகளும் மக்களுக்காகப் பணியாற்ற வேண்டும் என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம், வேலணை, நீர்வேலி மற்றும் வடமராட்சி ஆகிய இடங்களில் நடைபெற்ற மக்கள் சந்திப்புகளில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இதனைத்தெரிவித்தார். அங்கு மேலும் உரையாற்றிய பிரதமர்ஹறிணி அமரசூரிய,

வடக்கு, கிழக்கில் உள்ள பிரச்சினைகள் போரினால் ஏற்பட்டவை என்று கூறினார்கள். போர் முடிந்து 16 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் என்ன மாற்றம் ஏற்பட்டுள்ளது? இந்தப் பகுதிகளில் மக்களின் வாழ்க்கை நிலை முன்னேற்றமடைந்துள்ளதா?

உள்ளூராட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்குகிறது. ஆனால் குறித்த திட்டங்களுக்குப் பணம் சரியாகச் செலவிடப்படுவதை உறுதி செய்வதற்கு ஒரு வெளிப்படையான பொறிமுறை தேவை.

மே மாதம் 6ஆம் திகதி கிராமத்தை அபிவிருத்தி செய்யுங்கள். உங்கள் வாழ்க்கை நிலையை மேம்படுத்த உங்களுக்கு மிக நெருக்கமான மிகச் சிறிய அரசாங்கத்தை நியமிக்கும் முக்கிய உரிமை உங்களுக்கு கிடைத்துள்ளது. மோசடி அல்லது ஊழல் இல்லாமல் மக்களுக்கு சேவை செய்ய அர்ப்பணிப்புள்ள பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுங்கள்.

நாடு வீழ்ந்திருக்கும் சூழ்நிலையிலிருந்து மீள்வதற்கும் பொருளாதார சவால்களை வெற்றிகொள்வதற்கும் அரசாங்கம் தற்போது நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எல்லா விடயங்களும் இன்னும் சரியாக நடக்கவில்லை என்பதும் பொருட்களின் விலைகள் இன்னும் குறையவில்லை என்பதும் எங்களுக்குத் தெரியும். அரசாங்கம் அவற்றையெல்லாம் மாற்றி வருகிறது. எதிர்காலத்தில் மக்கள் அந்தப் பயன்களைப் பெறுவார்கள் என்றார். (ம-7)

# தளம்பாத பொருளாதாரத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க

நாட்டில் தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு எமக்கு பல தசாப்தங்களுக்குப் பின்னர் வாய்ப்பு கிட்டியுள்ளது. நாம் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். எம்மைத் தவிர வேறு எவராலும் அதனைச் செய்ய முடியாது. நாட்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாக்குப் பிடிக்கக்கூடிய தளம்பாத பொருளாதாரத்தை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நாம் முன்னெடுப்போமென ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் "வெற்றி நமதே- ஊர் எமதே" வெற்றிகர மான மக்கள் பேரணித் தொடர் கண்டி மஹியாவைப் பகுதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அங்கு உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, அமெரிக்காவினால் எடுக்கப்பட்ட வரிக்கொள்கை தீர்மானம் காரணமாக எமது நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

நாம் சவால்களை எதிர்நோக்க வேண்டும். அமெரிக்காவின் தீர்வை வரிக்கொள்கை அல்லது வேறு விதத்திலான பொருளாதார யுத்தம் அல்லது வேறு தொற்று நிலைமைகள் எமது பொருளாதாரத்துக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாதிப்பு ஏற்படுத்தலாம்.

அமெரிக்காவினால் விதிக்கப்படும் வரி சுனாமிக்கு எமது நாடு பாதிக்காதவாறு நடவடிக்கை எடுப்போம். அதனை எதிர்கொள்ளவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இரு தரப்புகள் தொடர்பில் நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். மீண்டும் நாட்டில் தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

இந்த பயணத்தையே எதிர்காலத்தில் நாம் முன்னெடுக்க வேண்டும். இதனை விட வேறு எந்த பயணத்தை முன்னெடுப்பது. எம்மை தவிர வேறு எவராலும் இதனை முன்னெடுக்க முடியாது என்றார். (ம-7)

# இலங்கை மின்சாரசபை அவசர கோரிக்கை

(கொழும்பு)

கூரைகளில் பொருத்தப்பட்டிருக்கும் சூரிய சக்தி படலங்களைப் பகல் நேரங்களில், மாலை 3.00 மணி வரை அணைக்குமாறு இலங்கை மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளது.

அதற்கமைய தங்கள் சூரிய படல அமைப்புகளைத் தாமாக முன்வந்து அணைக்குமாறு கூரை சூரிய மின்சக்தி படலங்களின் உரிமையாளர்கள் கோரப்பட்டுள்ளனர்.

அத்துடன் இன்று முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை கூரைகளில் பொருத்தப்பட்டிருக்கும் சூரியசக்தி படலங்களைப் பகல் நேரங்களில், மாலை 3.00 மணி வரை அணைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

மேலும் நீண்ட விடுமுறைக் காலத்தில் தேசிய மின்சார தேவையில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் அதிக சூரிய மின் உற்பத்தி காரணமாக தேசிய மின்சாரக் கட்டமைப்பில் அழுத்தம் ஏற்பட்டுள்ளதால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (ம-7)

### அநுராதபுரத்தில் தந்தையும் மகனும்

# கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு படுகொலை

(அநுராதபுரம்)

அநுராதபுரம் நொச்சியாகம பகுதியில் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு தந்தையும் மகனும் நேற்று முன்தினம் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் 56 மற்றும் 27 வயதுடைய இருவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளதாகவும் அவர்கள் முன்னதாக இடம்பெற்ற கொலையொன்று தொடர்பில் சந்தேக நபர்களாகப் பெயரிடப்பட்டிருந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இரட்டைக் கொலைக்கான காரணம் இன்னும் வெளியாகவில்லை எனவும் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண காணி பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் விவசாய காணி பிரச்சினையை விரைவில் தீர்ப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக அக்கரைப்பற்று பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தோல்வியுற்ற அரசியல் தரப்பினர் மக்க ளிடம் பிளவை ஏற்படுத்து வதற்கு விளைகின்றனர்.

கடந்த காலங்களில் திகன, அக்குரணை, அளுத் கம உள்ளிட்ட பகுதிகளில் முரண்பாடு ஏற்பட்டதுடன் பல வழிபாட்டு ஸ்தலங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட் டது.

எனினும் எதிர்வரும் காலங்களில் மீண்டும் அவ் வாறு இடம்பெறுவதற்கு இடமளிக்கப் போவதில்லை என உறுதியளிப்பதாக ஜனா திபதி அநுரகுமார திஸாநா யக்க தெரிவித்துள்ளார். (6-8)



# போதைப்பொருள் கடத்தலுக்கு பயன்படும் படகை கைப்பற்றிய கடற்படை

(கொழும்பு)

போதைப்பொருள் கடத் தலுக்குப் பயன்படுத்தப்பட் டதாகச் சந்தேகிக்கப்படும் படகு ஒன்று இலங்கை கடற்படை யினரால் நேற்று சனிக்கிழமை கைப்பற்றப் பட்டுள்ளது.

இலங்கை கடற்படையின ரால் கடற்பரப்பில் மேற் கொள் ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இந்த படகு கைப்பற்றப்பட் டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் இலங்கை கடற்படையினர் ஈடுபட்டு வரு கின்றனர். (நி-8)

# மன்னாருக்கு பிரதமர் விஜயம்

(மன்னார்)

மன்னாருக்கு பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று விஜயம் மேற்கொண்டார்.

தேசிய மக்கள் சக்தியின் நானாட்டான் பிரதேச சபை வேட்பாளர்களை ஆதரித்து நானாட்டான் பிரதான மண்டபத்தில் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் இடம் பெற்றது.

இதன்போது கட்சியின் வேட்பாளர்களை ஆதரிக்கும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.



பிரதமரின் நானாட்டான் பகுதிக்கான விஜயத்தை யொட்டி குறித்த பகுதியில் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப் பட்டு இருந்தமை குறிப்பிடத்தக் கது. (6-8-285)


## யாழ் வேலைவாய்ப்புக்கள்

| | |
|---|---|
| Technician (private Company) | 076 100 0231 |
| Show room Manager | 076 359 4362 |
| Technical officer(Construction) | 077 880 0143 |
| Cashier, Stock Keeper | 077 677 6115 |
| Maintenance Staff (Hotel) | 077 298 0542 |
| Supervisor, salesman | 077 999 9919 |
| Sales Manager (Basic 90,000/=) | 077 996 9661 |
| Cashier, Sales girls | 074 082 3494 |
| office & System Admin | 077 679 0646 |
| House Keeping | 077 536 7526 |

யாழ் வேலைவாய்ப்புக்கள் : dewmasweb.com
வேலையாட்கள் தேவையா :
074 138 3368, 021 728 4770
Dewmas:- No 51, Amman Road, Nallur, Jaffna
(3931)


# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதி மன்றின் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான துவிச்சக்கர வண்டிகள், கோடரிகள், சவள்கள் மற்றும் இதர பொருட்கள் என்பன எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 10 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என பருத் தித்துறை நீதிவான் நீதிமன்ற பதி வாளர் அறிவித்துள்ளார். (6-8)

# போதைப் பொருட்களுடன் இளைஞன் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில்குளப்பிட்டிப் பகுதியில் போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா கலந்த மாவாவுடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் குறித்த கைது நடவடிக்கை கடந்த வியாழக்கிழமை இரவு முன் னெடுக்கப்பட்டது.

19 வயதான குறித்த சந்தேக நபரிடம் இருந்து 94 போதை மாத்திரைகளும் 465 கிராம் கஞ்சா கலந்த மாவாவும் மீட்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளுக்குப் பின்னர் கைதான சந்தேக நபரை யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ள னர். (6-8-33)

# வெடிபொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கீரிமலைப் பகுதியில் நேற்று முன்தினம் வெடி பொருட்கள் மீட்கப்பட்டன.

நாராயணன் சுவாமி கோவிலுக்கு அருகாமையில் உள்ள கிணறு ஒன் றினைச் சுத்தம் செய்தபோதே இவ்வாறு வெடிபொருட்கள் அவதானிக்கப்பட்டன.

இந்நிலையில் காங்கேசன்துறை பொலிஸாருக்கு இவ் விடயத்தை தெரி யப்படுத்திய நிலையில் வெடிபொருட்கள் மீட்கப்பட்டன. (6-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 380 | 400 | 450 | 600 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 600 | 500 | 500 |
| தக்காளி | 600 | 550 | 400 | 450 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 250 | 250 | 250 | 200 |
| கோவா | 300 | 280 | 300 | 300 | 320 |
| கரட் | 550 | 500 | 500 | 450 | 600 |
| பூசணி | 250 | 200 | 160 | 180 | 200 |
| புடோல் | 200 | 250 | 250 | 230 | 350 |
| வாழைக்காய் | 150 | 100 | 100 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 250 | 150-250 | 350 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 150 | 140 | 200 |
| பாகற்காய் | 400 | 400 | 600 | 500 | 600 |
| வெண்டக்காய் | 350 | 320 | 250 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 400 | 250 | 250 | 320 |
| பயற்றங்காய் | 250 | 250 | 250 | 250 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 250 | 300 |
| பீற்றூட் | 400 | 400 | 400 | 400 | 450 |
| கறிமிளகாய் | 650 | 300 | 450 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 2300 | 2500 | 1600 | 2000 | 2400 |
| போஞ்சி | 450 | 550 | 500 | 450 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 300 | -- | 500 |
| கீரை - 1 பிடி | 120 | 150 | 150 | 90 | 150 |
| தேசிக்காய் | 200 | 80 | 200 | 100 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 150 | 150-250 | 200-250 |
| இராசவள்ளி | 650 | 600 | 500 | 600 | 500 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 300 | -- | 600 |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 130 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 100 |
| [illegible] | -- | -- | 100 | -- | 240 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புன்னாலைக்...

இதில் பலாலி கிழக்குப் பகுதியை சேர்ந்த கந்தவர்ணம் செல்வநாயகம் (வயது-62) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம் நோக்கி பலாலி வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த நபர் புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலயத்திற்கு அருகில், எவ்வித எச்சரிக்கை சமிக்ஞைகளும் இன்றி, இரவு வேளையில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம்தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட சுன்னாகம் பொலிஸார், ஆபத்தான முறையில் வீதியில் வாகனத்தை நிறுத்தி வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில் உழவு இயந்திர சாரதியான 27 வயதான இளைஞனைக் கைது செய்துள்ளனர்.

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## வடமராட்சி...

இதில் வடமராட்சிக் கிழக்கு மாமுனை செம்பியன்பற்றைச் சேர்ந்த 39 வயதான ஜே.நதீஸ்வரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

விபத்தில் படுகாயமடைந்தவர் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிப்பர் சாரதியை மருதங்கேணி பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60)

## வாக்குச்சீட்டு...

சிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் எதிர்வரும் 28ஆம் திகதிக்குள் நிறைவடையும் என அரச அச்சகர் பிரதீப் புஷ்ப குமார தெரிவித்தார். (ம-7)

## சாதி, மத...

தமிழில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்திருந்த அமைச்சர் விஜித ஹேரத் தனியார் ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தமிழில் கருத்துரைத்த அவர்,

"நாங்கள் இன பேதமின்றி ,சாதி பேதம் இன்றி, மதபேதமின்றி ஐக்கியப்பட வேண்டும் நாங்கள் எல்லோரும் ஒரு தாய்ப் பிள்ளைகளே நன்றி வணக்கம். எதிர்காலத்தில் கட்டாயம் மீண்டும் சந்திப்போம்" என்றார். (ம-7)

## காணாமல்...

ரணைகள் இடம்பெறும் எனவும் அதன் போது சட்டம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

மன்னார் பிரதேசத்தில் தீர்க்க வேண்டிய பல பிரச்சினைகள் உள்ளன. அது நமக்கு நன்கு தெரியும். நாம் இனவாதத்தை எதிர்க்கின்றோம். மக்களை ஒன்றிணைப்பதற்காகவே நாம் ஆட்சிக்கு வந்துள்ளோம். இந்த நாட்டுக்கு நல்லிணக்கம் தேவை. தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் ஆயிரக்கணக்கான தாய்மார்கள் இன்றும் கண்ணீர் வடிக்கின்றனர்.

அந்தத் துயரை நீக்க வேண்டும். அதனை நாம் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்க முடியாது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு எதிர்காலத்தில் உள்ளது. எமது நாட்டின் சட்டத்தை நாம் நடைமுறைப் படுத்துவோம்.

அரசாங்கம் என்ற வகையில் நமக்கு பொறுப்புள்ளது. நாட்டின் அனைவரையும் பாதுகாக்கும் பொறுப்பு நமக்குள்ளது. அதனைப் பாதுகாப்பதற்காக நாம் தீர்மானங்களை எடுக்கும்போது நண்பர்கள் என்று பார்க்க மாட்டோம். அதேபோன்று என்ன இனம் என்றும் பார்க்க மாட்டோம். எனவேதான் நீங்கள் நாட்டை நிர்வகிப்பதற்கு தலைவரைத் தேர்வு செய்ததுபோல் கிராமத்தை நிர்வாகிப்பதற்கு சிறந்த தலைவர்களைத் தேர்வு செய்யுங்கள் என்றார். (ம-7)

## எறும்பு...

டியபோது குழந்தையின் உடலில் மாறுதல்கள் ஏற்படுவதனை அவதானித்த பெற்றோர் குழந்தையை உடனடியாக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதித்தனர். எனினும் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளது.

மரணவிசாரணைகளை யாழ். மாவட்ட திடீர் மரணவிசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்றுப்பரிசோதனைக்கு அறிவுறுத்தினார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் எறும்பு கடித்த காயத்தால் ஏற்பட்ட கிருமித் தொற்றுக் காரணமாக உடல் அவயவங்கள் செயலிழந்தமையினால் மரணம் சம்பவித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60)

## யாழ்ப்பாணத்தில்...

விஜித ஹேரத்துக்கும் யாழ்.வர்த்தகர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று தனியார் ஹோட்டல் ஒன்றில் நேற்று நடைபெற்றது. இதன் போது கருத்துரைத்த அமைச்சர் விஜித ஹேரத், யாழ்ப்பாணத்தினை எதிர்காலத்தில் சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்ய நாம் தயாராகவுள்ளோம்.

ஆனால் யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் வெளிநாட்டு சுற்றுலாவிகள் நீண்ட நாட்கள் தங்கியிருந்து பார்வையிடக் கூடிய வசதிகள் இங்கு இல்லை. உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தால் எம்மால் இந்த இலக்கினை அடைய முடியும்.

ஹோட்டல் துறையை மட்டுமின்றி பல்வேறு விடயங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். சுற்றுலாத்துறை அமைச்சராக இது தொடர்பில் எம்மிடம் திட்டங்கள் பலவுள்ளன.

உங்களுக்கும் இந்தத் துறையில் முதலீடுகளை மேற்கொள்ள முடியும். இந்தப் பகுதியிலிருந்து சென்று வெளிநாடுகளில் வசிக்கின்ற சுவிஸ்லாந்து, கனடா, ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய பல நாடுகளில் உள்ளவர்கள் யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத்துறை தளங்களில் புதிய ஹோட்டல்கள் ஆரம்பிப்பதற்குத் தயாராக உள்ளதாக அறிகிறேன்.

சுற்றுலாத் துறைக்கு சொந்தமான காணிகள் இங்குள்ளன. அந்த இடங்களே வங்கிகள் ஊடாகத் திட்டமிட்டு உங்களுக்கு அந்தப் புதிய முன்மொழிவுகளை சமர்ப்பிக்க முடியும். அந்தக் காணிகளை முதலீடு செய்ய முடியும். துரிதமாக வளர்ச்சியடையும் சுற்றுலாத்துறைக்கு ஏற்ப யாழ்ப்பாண சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு நாம் ஒன்றாக இணைந்து செயற்படுவோம் என்றார். (ம-7)

## சுன்னாகத்தில்...

மீட்கப்பட்டவராவார்.

மரண விசாரணைகளை யாழ். மாவட்ட திடீர்மரணவிசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்றுப்பரிசோதனைக்கு அறிவுறுத்தியதனை அடுத்து சுன்னாகம் பொலிஸாரால் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பாரப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் மாரடைப்புக் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.(ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.04.12
சீட்டிழுப்பு இலக்கம் 5804
L 5 8 4 6 8 6
அத சம்பத
L 4 6 8 6
சீட்டிழுப்பு இலக்கம் 379
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.04.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1834
U 07 08 22 54 U
Double Chance 41868

மெகா பவர்
திகதி 12/04/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2152
T 21 13 39 50 66

ஜய
திகதி 2025.04.12
சீட்டிழுப்பு இலக்கம் 072
T 6 5 9 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4046
சீட்டிழுப்பு திகதி 12.04.2025
U 07 12 28 57
U
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.04.12
சீட்டிழுப்பு இலக்கம் 1113
மிதுனம் 19 29 36 48 மிதுனம்
98031 45

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபர் பல்
12.04.2025 வெற்றி வாரம் 512
C 2 6 2 2 7 5
91569
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.35.527,489.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2778
சீட்டிழுப்பு திகதி 2025.04.12 தினம் சனிக்கிழமை
09 19 30 79 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,455,740.00
DLB

சனிதா
திகதி 12.04.2025 வெற்றி வாரம் 4939
03 04 52 79 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,561,616.00
53072
DLB

சசிரி
வெற்றி வாரம் 663
சீட்டிழுப்பு திகதி 12.04.2025 சனிக்கிழமை
19 26 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4490
சீட்டிழுப்பு திகதி 12.04.2025 தினம் சனிக்கிழமை
19 28 47 59 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,088,085.60
216199
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 11 21 37 59 73
சீட்டிழுப்பு வாரம் 1954
12.04.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.572,133,093.60
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2604
சீட்டிழுப்பு திகதி : 2025.04.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,000,000.00
19 31 70 75 Z
519070
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Mathematics & Science
**Grade 6 - 11**
**Personal & Group Classes**
**English & Tamil Medium**
(Theory, Model Papers & Past Papers will be coverd)
Mr.Pranav
Contact No : 075 719 9897
(1017)

## கனடா CANADA
நிரந்தர குடியுரிமை PR
கல்வித் தகைமை: A/L & Any HEATH CARE DIPLOMA & 06 Month Work Experiance
**IELTS General - 4.5 Overall**
IELTS வகுப்புகள் / CARE HOME பயிற்சி நெறிகள் நடைபெறுகின்றன
குடும்பத்துடன் பயணிக்க அதுவும் நிரந்தர குடியேற்றவாசியாக பயணிக்க அரிய சந்தர்ப்பம்
**WEC COLLEGE**
ஆரியகுளம் (புதிய உயர்கல்லூரி வளாகம்) 0779265447
சங்கத்தானை (இந்துக் கல்லூரி அருகே) 0217200989
(C-2700)

## Biology & Chemistry
**2027 A/L Batch**
**Personal & Group Classes**
**English & Tamil Medium**
Mr.S.Vinojan (Medical Student)
Contact No : 076 485 5392
(1017)

## A/L - PHYSICS CLASS
27,26 Batch இற்கான பௌதிகவியல் தனிப்பட்ட வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன வீடு வந்தும் கற்பிக்கப்படும்.
**Ranjit Sir**
B.Sc, P.G.D.E, S.L.P.S - I
077 600 4896
(3925)

## காங்கேசன்துறையில் காணி விற்பனைக்கு
K.K.S Road முகப்பாகக் கொண்ட 19 பேச் காணி 54 பேச் காணி விற்பனைக்கு உண்டு.
K.K.S துறைமுகத்தில் இருந்து 500m தூரத்தில் நடேஸ்வரா கல்லூரிக்கு முகப்பாக உள்ளது.
விலை ஒரு பேச் 1.2 மில்லியன்
T.P : 077 767 6169
(3849)

## பணிப்பெண் தேவை
கோண்டாவில் பகுதியில் வீட்டு வேலைகள் செய்ய பணிப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு :
077 949 0903
(3926)

## வீட்டுப் பணிப்பெண் தேவை
யாழ். நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.
- சம்பளம் 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

தொடர்புகளுக்கு :
075 498 5400, 077 937 0000
021 221 7600
(1019)

## Pearson International College


- இலங்கையில் முதன்முறையாக **TESL** தகைமையுடைய கனடா விரிவுரையாளர்கள் வழங்கும் கனடா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட **IELTS** மற்றும் **Diploma** கற்கை நெறிகள்.
- கற்பித்தல் உங்களுக்கு திருப்திகரமானதாக இல்லையெனில் **100% money back Guarantee**
- எம்மிடம் கல்வி கற்று **Band 7** க்கு மேல் பெற்ற மாணவர்களின் பெறுபேறுகளை பார்த்து உறுதி செய்யுங்கள்.
- இப்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் வட மாகாணத்தில் **No. 1 IELTS Coaching**

074 188 7878, 074 385 7584
www.picsl.lk
TESL CANADA | TESL Ontario
(1009)

## அறுசுவை உணவுகளிற்கு
**றோயல்** சுத்தமான பசு நெய்
Royal


உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான றோயல் நெய் கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்
**ஆய்வுகூடத்தில் தரம்** பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது
குறிப்பு :- யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க்கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
Marketed By:- சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
குறிப்பு (சத்திரச்சந்திக்கு அருகாமை)
தொ.பே : 021 2222 567
Packed By:- Royal Industries®

## உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்


விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**
எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2698)

## காணி விற்பனைக்கு
நீர்வேலி சிறுப்பிட்டியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
ஒரு பரப்பின் விலை 12 லட்சம்
தொடர்புகளுக்கு:
077 820 9424
(3870)

## தொழில் தொடங்கும் இளைஞர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்
சங்கரத்தை முருகமூர்த்தி கோவிலுக்கு அண்மையில் உள்ள ரட்ணசிங்கம் மணிமண்டபத்தை தொழில் தொடங்கும் இளைஞர்களுக்கு வரப்பிரசாதமாக வழங்கவுள்ளோம்.
- திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள்
- பிறந்தநாள் கொண்டாட்டங்கள் போன்றவற்றை நடத்தலாம் அல்லது
- தனியார் அலுவலகமாகவோ சிறிய தொழிற்சாலையாகவோ பயன்படுத்தவும் முடியும்.

குறிப்பிட்ட காலத்திற்கு வாடகை இலவசம்
- 3 பேஸ் மின்சாரம், இரண்டு அலுவலகம், மலசலகூட வசதி, வாகனத் தரிப்பிடம் மேலும் பல வசதிகளுடன்...

மேலதிக தொடர்புகளுக்கு
076 017 1951, 077 662 5516
00447956377627(whatsapp)
(3775)

## றோயல் சுத்தமான தேன்
தேன் ஒரு அருமருந்து, சீனிக்குப் பதிலாக தேனைப் பயன்படுத்துவதனால், இரத்தத்திலுள்ள சீனியின் அளவு சீராகி கொலஸ்ரோலின் அளவு குறையும். இதயநோய் தாக்காது. உடல் எடை குறையும். இவ்வாறு பல பயன்களைக் கொண்டது.
Royal


உங்கள் முழுக் குடும்பத்தின் ஆரோக்கியத்தினைப் பாதுகாத்திட இன்றே பாவியுங்கள் றோயல் சுத்தமான தேன்.
**ஆய்வுகூடத்தில் தரம்** பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.
குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும், சுப்பர்மார்க்கட்களிலும், பலசரக்கு கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
Marketed By:- சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
குறிப்பு : (சத்திரத்துச்சந்திக்கு அருகாமையில்)
தொ.பே : 021 2222 567
Packed By:- Royal Industries
(C-2678)

## வேலைவாய்ப்பு
**Sun Marketing (Pvt) Ltd**
பணியிடங்கள்
- டிரைவர்
- விற்பனை பிரதிநிதி (Rep)
- உதவி கணக்காளர் (Assistant Accountant)

முகவரி
No. 462, Main Street, Jaffna.
பணிநேரம் : காலை 8.00 – மாலை 5.30
சம்பளம் : அனுபவத்துக்கு ஏற்ப
CV அனுப்பவும் :
Sunmarket12@gmail.com
தொடர்பு :
076 139 1993
(1016)

## காணி விற்பனைக்கு உண்டு
**யாழ்ப்பாணம் வடமராட்சி கரவெட்டி அல்வாய் கிழக்கில் 10 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் இருவழிப் பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதி முகப்புடன் பதினேழு இலட்சம் ரூபாய் (17,00 000/=), இரண்டாம் காணி (நடுப் பகுதி) பதினைந்து லட்சம் (15, 00 000/=), பின் பகுதிக் காணி எட்டு லட்சம் ரூபாய் (8,00 000/=)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 ½ Km, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 Km, மந்திகை ஆஸ்பத்திரி 1 Km, பருத்தித்துறை வீதி 600m, மாலு சந்தி 1 Km தூரம்.
- தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 Km தூரம், மாலு சந்தி பிள்ளையார் கோவில் 1 Km தூரம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை, நன்னீர் ஊற்று
- கரவெட்டிப் பிரதேச சபை 1Km தூரம்
- தரகர் தேவையில்லை.

(பார்வையிடும் நேரம் காலை 8.00 – மாலை 6.00 மணி வரை)
தொடர்புகளுக்கு:
076 860 2770, 076 987 8617
076 935 3971
(3938)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | | |
|---|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | -219/= | Max 5Kg | |
| 1Kg Prima கோதுமை மா | -158/= | | |
| 1Kg சிவப்பு பருப்பு | -259/= | | |
| 1Kg றவை | -290/= | | |
| 1Kg பொன்னி அரிசி | -243/= | | |
| 1Kg திட்டல் பச்சை | -243/= | | |
| 1Kg சுக்குத்திட்டல் (உள்நாடு) | -217/= | | |
| 1Kg கீரி சம்பா | -260/= | Max 2Kg | |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | -217/= | | |
| 1Kg கடலை | -380/= | | |
| 1Kg சோயா | -360/= | | |
| 10Kg விஜிதா நாடு | -2850/= | | 3000/= |
| 700g சுபோஷா | -570/= | | 590/= |
| 01 அங்கர் யோக்கட் | -45/= | | 70/= |
| 180Ml சன்சில்க் சம்போ(மஞ்சள்) | -380/= | | 480/= |
| 1.5 ℓ பெப்சி சோடா | -310/= | | 360/= |


400g Anchor 1040/= ~~1100/=~~


1Kg சன்லைட் பவுடர் 270/= ~~320/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு
Facebook:- happy basket.lk இனை நாடவும்
பலாலி வீதி, உரும்பிராய்ச் சந்தி.
Happy Supermarket
0777 8080 30
(1018)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.